பக்கங்கள்: 16

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 சித்திரை 13 ஞாயிற்றுக்கிழமை 26.04.2020 கதிர் 172

## 452 பேருக்கு கோரோனா

கொழும்பு, ஏப்.26

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 3 பேர் நேற்று (ஏப்ரல் 25) சனிக்கிழமை இரவு அடையாளம் காணப்பட்டுள் ளனர் என்று பக்கம் 02

# படுவேகமாக எகிறுகின்றது கொரோனா!

## நாளுக்கு நாள் தொற்றாளர் எண்ணிக்கை இரட்டை இலங்கங்களினால் உயர்கிறது

கொழும்பு, ஏப்.26

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான கடற்படைச் சிப்பாய்களின் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றது. நேற்று இரவு 10.00 மணியுடன் நிறைவடைந்த 14 மணி நேரத்தில் 7 கடற்படையினர் உட்பட 32 பேர் வரை புதிய தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள் ளனர். இதன்படி இலங்கையில் அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களின் எண்ணிக்கை 452 ஆக உயர்ந்துள்ளது எனச் சுகாதார அமைச்சின் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு தெரிவித்தது. பக்கம் 02

## பல்லாயிரம் கோடி ரூபாவுக்கு ஒப்பந்தம்

கொழும்பு.ஏப்.26

கொரோனா அச்சத்தில் நாடு மூழ்கி, ஊரடங்கில் அடங்கிப் போயிருக்கும் இந்த நெருக்கடி சமயத்தில் பெரும் தெருக்கள் அமைச்சும், வீதி அபிவிருத்தி அதிகார பக்கம் 02

## இனிது ரகசியம் அல்ல!

நேற்று இப்பத்தியில் நான் குறிப்பிட்டபடி, அரசமைப்பின் 19ஆவது திருத்தத்துக்குக் கொண்டு வரப்பட்ட சில ஷரத்துகள் குறித்து விவரிக்க விரும்புகின்றேன்.

இது சட்ட விடயம் என்றாலும் அரசியல் கண்ணோட்டத்தில் அதனை விவரிக்கின்றேன்.

2015 ஜனவரியில் பக்கம் 02

## 31 இந்தியப் பிரஜைகள் தனிமைப்படுத்தலில்

கொழும்பு,ஏப்.26

நுரைச்சோலை லக்விஜய அனல் மின் உற்பத்தி நிலையத்தில் நிலக்கரி விநியோக நடவடிக்கையில் ஈடுபடும் 31 இந்தியப் பிரஜைகள் தனிமைப்படுத்தப் பட்டுள்ளனர்.

உதவி சுகாதார வைத்திய அதிகாரி தமிஸ்ரி மதுலால் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

உடல்வெப்பநிலைஉள்ளிட்ட மேலதிக பரிசோதனைகளின் பின்னரே இவ்வாறு தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர் என அவர் குறிப்பிட்டார்.

நுரைச்சோலை அனல் மின் நிலையத்திற்கு கொண்டுவரப் படும் நிலக்கரிகளை, உரிய பகுதிக்கு எடுத்துச் செல்லும் நடவடிக்கையில் 106 இந்தியப் பிரஜைகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## கடற்படையினரின் விடுமுறை இரத்து

கொழும்பு, ஏப்.26

அனைத்துக் கடற்படையினரதும் விடுமுறை மறு அறிவித்தல் வரை இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பியல் டிசில்வா இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைமை வழமைக்கு திரும்பும் வரை விடுமுறைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என அவர் கூறினார்.

அத்துடன், அனைத்து கடற்படை வீரர்களும் தமது முகாமிலிருந்து வெளியேறுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கொரோனா தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ள படையினருடன் தொடர்புகளைப் பேணியவர்கள் தொடர்பிலான தகவல்கள் சேகரிக்கப் பக்கம் 02

## அ.அட்டையின் கடைசி இலக்க அடிப்படையில் நடமாட அனுமதி

கொழும்பு, ஏப்.26

உணவு மற்றும் மருந்துப் பொருள்கள் போன்ற அத்தியாவசிய பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக மட்டுமே எவரும் தமது வீடுகளில் இருந்து வெளிச்செல்ல வேண்டும். அத்தகைய பொருள்களைக் கொள் வனவு செய்வதற்கு நடந்து சென்றடைய முடியுமான அருகில் உள்ள விற்பனை நிலையங்களைத் தெரிவு செய்ய வேண்டும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு அனுப்பி வைத்த செய்திக் பக்கம் 02

## பிக்கு கைதானார்

கொழும்பு, ஏப்.26

வாரியப்பொல பொலிஸ் நிலையத்துக்குள் புகுந்து கான்ஸ்டபிள் ஒருவரை தாக்கிய வாரியப்பொல நகர விகாரை ஒன்றின் பிக்கு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட அவர் தலா 5 லட்ச ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் விடுதலை செய்யப் பட்டார்.

ஒவ்வொரு ஞாயிறும் காலை 9 மணி முதல் 12 மணி வரைக்குள் பிக்கு பொலிஸ் நிலையத்தில் ஆஜராகி கையொப்பமிட வேண்டுமென நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## வேட்பாளர்களுடன் சேர்ந்து அதிகாரிகள் செயற்பட தடை

கொழும்பு, ஏப்.26

அரச நிவாரணங்கள் வழங்கும் நடவடிக்கைகளில் நாடாளுமன்ற வேட்பாளர்கள் எவருடனும் இணைந்து செயற்படவேண்டாம் என்று தேர்தல்கள் ஆணைக் குழு அறிவித்துள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் தேர்தல்கள் ஆணைக்குழுவால் வெளியிடப் பட்டுள்ளது.

அந்த அறிவித்தலில், தேர்தல்காலப் பகுதிக்குள் மக்களுக்கு அரசால் பக்கம் 02

## 19 மாவட்டங்களில் கொரோனா

கொழும்பு, ஏப்.26

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகிய மாவட்டங்கள் 16 இலிருந்து 19 ஆக உயர்ந்துள்ளன.

வெலிசறை கடற்படை முகாமில் இருந்து விடுமுறையில் வீடு சென்ற சிப்பாய்களும் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி வருவதால் அவர்களின் சொந்த மாவட்டங்களும் பாதிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய அநுராதபுரம், மொனராகலை மற்றும் மாத்தளை ஆகிய 3 மாவட்டங்களும் பாதிப்பில் உள்ளடக்கப்பட்டுள் ளன.

சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையின் பிரகாரம் கொழும்பு மாவட்டத்தில் 142 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 59 பேரும், புத்தளம் மாவட்டத்தில் 35 பேரும், கம்பஹா மாவட்டத்தில் பக்கம் 02

## நான்கு மாவட்டங்களில் மே 4 வரை ஊரடங்கு

கொழும்பு, ஏப்.26

கொரோனா வைரஸ் தொற்றுள்ள அபாய வலயங்களான கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் புத்தளம் மாவட்டங்களில் நடைமுறையில் இருக்கும் ஊரடங்குச் சட்டம் எதிர்வரும் மே 4ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 5 மணிவரை நீடிக்கப்படும் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களுக்குள் பிரவேசிப்பது, அங்கிருந்து வெளியேறிச் செல்வது என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

முன்னதாக பக்கம் 02

## ரூ.24,000 கோடி புதுநோட்டுகள் புழக்கத்திற்கு!

கொரோனாத் தொற்றுக் கால நெருக்கடிளைச் சமாளிப்பதற்காக அரசாங்கம் புதிதாக 24 ஆயிரம் கோடி ரூபாவுக்கு புதிய நோட்டுக்களை அச்சடித்து புழக்கத்தில் விட்டிருப்பதாகக் கொழும்புச் செய்திகள் பக்கம் 02

## மாகாணங்களுக்கு இடையே பஸ் சேவைகளுக்குத் தடை

கொழும்பு, ஏப்.26

மாகாணங்களுக்கு இடையிலான பஸ் சேவைகள் நாளை திங்கட்கிழமை தொடக்கம் மறு அறிவித்தல்வரை இடைநிறுத் தப்பட்டுள்ளன என்று அரசு அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

மாகாணங்களுக்கு இடையிலான பஸ் சேவையால் தனிமைப்படுத்தலில் உள்ளவர்கள் வேறு மாகாணங்களுக்குப் பயணிப்பதற்கு வாய்ப்பிருப்பதாக சுகாதாரத் துறையினர் சுட்டிக் காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் எதிரணி வேட்பாளராக நிறுத்தப்பட்ட மைத்திரிபால சிறிசேன வெற்றியீட்டியதும் பிரதமர் பதவி அதுவரை எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ரணில் விக்கிரமசிங்க கைகளுக்கு வந்தது.

சு.கவின் தலைமைப் பதவியை முன்னாள் ஜனாதிபதியாகிவிட்ட மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து மைத்திரிபால சிறிசேன 'பிடுங்கிக்' கொண்டமையை அடுத்து அரசமைப்புக்கான 19ஆவது திருத்தத்துக்கு முன் ஆயத்தங்கள் செய்யப்பட்டன.

பிரதான பொறுப்பு பிரதமரின் அப்போதைய அரசமைப்பு விவகார ஆலோசகரான ஜயம்பதி விக்கிரமரத்ன மற்றும் அப்போதைய எம்.பியான சுமந்திரனிடம் ஒப்படைக்கப்பட்டது.

அந்த அரசமைப்புத் திருத்தத்தில் முக்கிய விடயங்களில் ஒன்று ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத்தின் பதவிக் காலத்தை ஆறு ஆண்டுகளில் இருந்து ஐந்து ஆண்டுகளாகக் குறைப்பதாகும். ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் பொது மக்களுக்கு அளித்த வாக்குறுதிப்படி அந்த நடவடிக்கையை எடுக்க முன்வந்தது நல்லாட்சி அரசு.

அப்போதுதான் ஆறு ஆண்டுகள் பதவிக் காலத்துக்கான மக்கள் ஆணையுடன் அதிகாரத்துக்கு வந்திருந்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

ஆனால், அந்த 19ஆவது திருத்தத்தை நிறைவேற்ற வேண்டிய நாடாளுமன்றமோ அதன் ஆறு ஆண்டு பதவிக்காலத்தில் ஐந்தாவது ஆண்டில் இருந்தது.

இதை ஒன்றையும் பார்க்காமல் இரு தரப்புகளினதும் பதவிக் காலத்தை ஐந்து ஆண்டுகளாகக் குறைக்கும்படி பரிந்துரைத்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. ஆறு ஆண்டுகள் பதவிக் காலத்துக்குத் தேர்வு செய்யப்பட்ட அவருக்கு ஐந்து ஆண்டுகளுடன் அப்பதவியிலிருந்து நீங்குவது அப்போது ஒரு பொருட்டாகவேபடவில்லை.

அதன்படி அந்த மாற்றங்கள் அரசமைப்புக்குக் கொண்டு வரப்பட்டன.

ஏற்கனவே இந்த இரண்டு தரப்புகளுக்குமான பதவிக்காலம் பற்றிய ஷரத்துக்கள் ஜனாதிபதி, நாடாளுமன்றம் ஆகிய தலைப்புகளின் கீழ் அரசமைப்பில் அடக்கப்பட்டிருந்தன.

ஜனாதிபதியின் பதவிக்காலம் ஆறு ஆண்டுகள் என அரசமைப்பின் 30 ஆவது ஷரத்துக் கூறியது.

நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் ஆறு ஆண்டுகள் என 62 ஆவது ஷரத்துத் தெரிவித்தது.

அதேசமயம் இந்த இரண்டு பதவிக் காலங்களையும் மாற்றுவது, நீடிப்பது தொடர்பான இன்னொரு ஷரத்து இதற்குப் பிற்பட்ட ஒரு பகுதியில் இருந்தது.

அது, அரசமைப்பைத் திருத்துவது மாற்றுவது, புதுப்பிப்பது தொடர்பான பிரிவாகும்.

அரசமைப்பில் எந்தெந்த விடயங்களை மாற்றுவதாயின் வெறுமனே நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பங்கினரின் ஆதரவோடு அதைச் செய்யலாம், எந்தெந்த விடயங்களை மாற்றுவதாயின் இப்படி மூன்றில் இரண்டு பங்கினரின் ஆதரவோடு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்களின் அனுமதியும் பெறப்பட வேண்டும் என்பதை அந்த ஷரத்து விவரித்திருந்தது.

அது அரசமைப்பின் 83ஆம் பிரிவாகும்.

அதன்படி, நாடாளுமன்றத்தின் பதவிக் காலத்தை அல்லது ஜனாதிபதியின் பதவிக் காலத்தை ஆறு ஆண்டுகளுக்கு அதிகமாக நீடிக்கும் எந்த ஏற்பாட்டைச் செய்வதாயினும் அதற்கு மூன்றில் இரண்டு பங்கு எம்.பிக்களின் ஆதரவோடு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதி பெறப்பட வேண்டும். - இப்படித்தான் 19ஆம் திருத்தம் வரமுன்னரும் 83 (பி) ஷரத்துத் தெரிவித்தது.

19ஆவது திருத்தத்தின் கீழ் -

ஜனாதிபதியின் பதவியைக் குறிக்கும் 30ஆவது பிரிவில் 'ஆறு ஆண்டுகள்' என்பது 'ஐந்து ஆண்டுகள்' ஆகவும் -

நாடாளுமன்றத்தின் பதவிக்காலத்தைக் குறிக்கும் 62 ஆவது ஷரத்தில் 'ஆறு ஆண்டுகள்' என்பது 'ஐந்து ஆண்டுகள்' ஆகவும் - மாற்றப்பட்டன.

ஆனால், ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத்தின் பதவிக் காலத்தை ஆறு ஆண்டுகளை விட அதிகரிப்பதற்கு வகை செய்யும் அரசமைப்புத் திருத்தம் ஏதும் நடைமுறைக்கு வருவதாயின் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கினரின் ஆதரவைப் பெறுவதோடு, சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அங்கீகாரம் பெறப்படவும் வேண்டும் என்ற 83 (பி) ஷரத்தில் 'ஆறு ஆண்டுகள்' என்ற வாசகத்தை 'ஐந்து ஆண்டுகள்' என்று 19 ஆவது திருத்தத்தில் மாற்றாமல் தவிர்த்து விட்டனர் ஜயம்பதி விக்கிரமரத்னவும், சுமந்திரனும்.

அப்படி அப்போது திருத்தாமல் விட்டபடியால் -

இப்போதும் கூட, நாடாளுமன்றத்தில் வெறுமனே மூன்றில் இரண்டு பங்கு எம்.பிக்களின் ஆதரவு இருக்குமானால் எந்தச்சிக்கலும், குழப்பமுமின்றி விரும்பிய நேரத்தில் ஜனாதிபதியின் பதவிக் காலத்தை ஆறு ஆண்டுகளாகவும், நாடாளுமன்றத்தின் பதவிக் காலத்தை ஆறு ஆண்டுகளாகவும் மாற்ற முடியும். அதற்குத் தடை ஏதும் இல்லை.

மைத்திரிக்குக்குப் பிறகு அடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதானே என்ற கருத்தில் இப்படி ஒரு பொறி - ஓட்டை - அப்போது வைக்கப்பட்டிருக்கலாம்.

ஆனால், அதனால் இப்போது அதிர்ஷ்டம் அடையப்போகின்றவர்கள் ராஜபக்ஷக்களாக இருப்பர்.

ஆக, கலைக்கப்பட்ட நாடாளுமன்றம் மீண்டும் கூட வாய்ப்புக் கிட்டுமானால் - அதில் கொரொனா நெருக்கடியை ஒட்டி ஆளும் தரப்பும் எதிரணிக் கட்சிகளும் ஒன்றுபட்டு நிற்கும் வாய்ப்பு ஏற்படுமானால் - அந்த மூன்றில் இரண்டு பங்கு எம்.பிக்களின் ஆதரவுடன் தனது பதவிக் காலத்தை மேலும் ஓராண்டுகள் நீடித்து - அடுத்த ஆண்டு ஓகஸ்ட் கடைசி வரை - அந்த நாடாளுமன்றம் பதவியில் தொடர முடியும்.

அது போலத்தான் புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் தனது பதவிக் காலத்தை சுமுகமாக இன்னொரு வருடத்துக்கு நீடித்து விட முடியும்.

ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத்தின் பதவிக் காலத்தை ஆறு ஆண்டுகளில் இருந்து ஐந்து ஆண்டுகளாகக் குறைக்கும் கைங்கரியத்தை 19ஆவது திருத்தம் மூலம் கனகச்சிதமாக நிறைவேற்றிய ஜயம்பதி விக்கிரமரத்ன - சுமந்திரன் இணை அதை மீளவும் ஆறு ஆண்டுகளாக மாற்றுவதற்கு வசதியாக இலகுவான ஓட்டை ஒன்றை விட்டு வைத்தது ஏன்?

பதிலை வாசகர்களின் ஊகத்துக்கே விட்டு விடுகின்றேன்.

-மின்னல்-

## வேட்பாளர்களுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகிர்ந்தளிக்கப்படும் நிவாரணங்களை வழங்கும் நடவடிக்கைகள் அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள், நியதிச் சட்ட சபைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிச் சபைகள் என்பவற்றின் அலுவலர்கள் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் எந்தவொரு வேட்பாளரோடும் இணைந்து செயற்படுவது கட்சிகள் அல்லது குழுக்கள் அல்லது வேட்பாளர்கள் ஊக்குவிப்பைத் தூண்டுவதால் அதனைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## பல்லாயிரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபையும் 16 ஆயிரம் கோடி ரூபாவுக்கு மேற்பட்ட அதிவேகப் பாதை ஒன்றுக்கான ஒப்பந்தத்தை கேள்விக் கோரல் ஏதுமின்றி மூடிய ஏற்பாட்டில் பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்றுடன் இறுதி செய்யும் மும்முரத்தில் இருப்பதாகச் செய்திகள் கசிந்துள்ளன.

குருநாகல் - தம்புள்ள இடையேயான அதிவேகப் பாதையின் நான்காம் கட்டத்துக்கான ஒப்பந்தமே இது. முன்னர் இதற்கான செலவினம் 16 ஆயிரத்து 161 கோடி ரூபா என மதிப்பிடப்பட்டிருந்தது. அது இப்போது இன்னும் அதிகமாக இருக்கும் என்று கூறப்படுகின்றது.

திறந்த கேள்விப் பத்திரம் இன்றி, மூடிய சுற்றில் நிறுவனம் ஒன்றை அடையாளம் கண்டு அதனுடன் இந்த விடயம் தொடர்பாக ஒப்பந்தம் செய்வதற்கு அமைச்சரவையும் அனுமதி வழங்கியிருக்கின்றதாம்.

இத்திட்டத்துக்கான நிதி முழுவதும் வெளிநாட்டுக் கடனாக பெறப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## கடற்படையினரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளன எனவும் கடற்படைத் தளபதி கூறியுள்ளார். இந்தத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அவர்களைத் தனிமைப்படுத்திக் கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## 19 மாவட்டங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

33 பேரும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 16 பேரும், கண்டி மாவட்டத்தில் 07 பேரும், இரத்தினபுரி மாவட்டத்தில் 06 பேரும், குருநாகல் மாவட்டத்தில் 5 பேரும், கேகாலை மாவட்டத்தில் 04 பேரும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், மாத்தறை, அம்பாறை, பதுளை மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் தலா 2 பேர் வீதமும், காலி, மட்டக்களப்பு, வவுனியா, பொலனறுவை, மாத்தளை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் தலா ஒருவர் வீதமும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நுவரெலியா, அம்பாந்தோட்டை, திருகோணமலை, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய 06 மாவட்டங்களில் இன்னும் எவரும் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்படவில்லை.

இதனிடையே தனிமைப்படுத்தும் நிலையங்களில் இருந்து 38 பேரும், வெளிநாட்டுப் பிரஜைகள் 03 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## 452 பேருக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இதனடிப்படையில் இலங்கையில் கோரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 452ஆக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண் உள்பட) அதிகரித்துள்ளது.

கோரோனா வைரஸ் தொற்று உள்ளனர் என நேற்று 32 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

118 பேர் முழுமையாகக் குணமடைந்து வீடுதிரும்பியுள்ளனர். 7 பேர் உயிரிழந்துள்ளனர். 327 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## நான்கு மாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மாவட்டங்களில் நாளை திங்கட்கிழமை அதிகாலை 5 மணிக்கு ஊரடங்கு நீக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம் உட்பட ஏனைய 21 மாவட்டங்களிலும் நாளை திங்கட்கிழமை அதிகாலை 5 மணிக்குத் தளர்த்தப்படும் ஊரடங்குச் சட்டம் மீளவும் அன்று இரவு 8 மணிக்கு நடைமுறைப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## அ.அட்டையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

அத்தியாவசிய தேவைகளுக்காக என்றபோதும் வீட்டிலிருந்து வெளிச்செல்ல அனுமதிக்கப்படுவது தேசிய அடையாள அட்டையின் இறுதி இரண்டு இலக்கங்களின் அடிப்படையிலாகும். அந்த வகையில் திங்கட்கிழமை நாள்களில் வெளிச்செல்ல அனுமதிக்கப்படுவோர் இலக்கம் 1அல்லது 2 என்ற இலக்கங்களை தேசிய அடையாள அட்டையின் இறுதி இலக்கங்களாக கொண்டுள்ளவர்கள் மட்டுமேயாகும்.

வாரத்தின் ஏனைய நாள்களில் வீடுகளில் இருந்து வெளிச்செல்வதற்கு பின்வருமாறு இடமளிக்கப்படும்.

செவ்வாய்: அடையாள அட்டையின் இறுதி இலக்கமாக 3அல்லது 4 என்ற இலக்கத்தினை கொண்டவர்கள்.

புதன்: அடையாள அட்டையின் இறுதி இலக்கமாக 5 அல்லது 6 என்ற இலக்கத்தினை கொண்டவர்கள்.

வியாழன்: அடையாள அட்டையின் இறுதி இலக்கமாக 7 அல்லது 8 என்ற இலக்கத்தினை கொண்டவர்கள்.

வெள்ளி: அடையாள அட்டையின் இறுதி இலக்கமாக 9 அல்லது 0 என்ற இலக்கத்தினை கொண்டவர்கள்.

## படுவேகமாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று அடையாளம் காணப்பட்ட 32 பேரில் 12 பேர் கொழும்பு, கொட்டாஞ்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பண்டாரநாயக்க மாவத்தைப் பகுதியைச் சேர்ந்தவர்களாவர்.

அவர்களில் 11 பேர் வெலிகந்தை கந்தகாடு தனிமைப்படுத்தல் முகாமில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் கண்டறியப்பட்டுள்ளதுடன் மற்றையவர் 12 வயதான சிறுவனாவார். அவர் பண்டாரநாயக்க மாவத்தை பகுதியில் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின்போது அடையாளம் காணப்பட்டுள்ளார். இந்நிலையில் பண்டாரநாயக்க மாவத்தைப் பகுதியிலும் அதனை அண்மித்த பகுதியிலும் பி.சி.ஆர். பரிசோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் நேற்று வெலிசறை கடற்படை முகாமைச் சேர்ந்த 7 கடற்படைச் சிப்பாய்கள் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களில் நால்வர் வெலிசறை முகாமுக்குள்ளும் ஏனைய மூவரில் இருவர் அவிசாவளை மற்றும் கொடகவல பகுதியிலும் மற்றையவர் மொனராகலைப் பகுதியில் வைத்தும் இவ்வாறு தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஏனையோர் குறித்து விவரங்கள் வெளிப்படுத்தப்படாத நிலையில், நேற்று மட்டும் பாதிக்கப்பட்ட 9 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பினர் எனத் தொற்று நோய் தடுப்புப் பிரிவு கூறியது. அதன்படி இதுவரை குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 118 ஆக உயர்ந்துள்ளது.

அதிகமான தொற்றாளர்கள் கொழும்பு மாவட்டத்திலேயே கண்டறியப்பட்டுள்ளனர். கொழும்பு மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள தொற்றாளர்களின் எண்ணிக்கை 152 ஆகும். கொழும்பு மாவட்டத்தில் கொட்டாஞ்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பண்டாரநாயக்க மாவத்தையில் மட்டும் கண்டறியப்பட்ட தொற்றாளர்களின் எண்ணிக்கை 95 வரை உயர்ந்துள்ளதாகக் கொழும்பு மத்தி சுகாதார வைத்திய அதிகாரி டப்ளியூ.கே. சந்தபால கூறினார்.

அதற்கு அடுத்தபடியாக களுத்துறை மாவட்டத்தில் 59 பேரும், புத்தளத்தில் 35 பேரும் கம்பஹா மாவட்டத்தில் 33 பேரும் இதுவரை தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்கள் எண்ணிக்கை 16 ஆகும். கண்டியில் 7 பேரும், இரத்தினபுரியில் 6 பேரும், குருணாலையில் 5 பேரும், கேகாலையில் நால்வரும் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மாத்தறை, கல்முனை, பதுளை, அநுராதபுரம் ஆகிய சுகாதார மாவட்டங்களில் தலா இருவர் வீதமும், காலி, மட்டக்களப்பு, வவுனியா, பொலனறுவை, மாத்தளை, மொனராகலை மாவட்டங்களில் தலா ஒவ்வொரு கொரோனா தொற்றாளர் வீதமும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இலங்கையில் நேற்று இரவு 10.00 மணி வரை அடையாளம் காணப்பட்ட 452 தொற்றாளர்களில், 3 வெளிநாட்டவர்களும், வெளிநாட்டிலிருந்து வந்து நேரடியாக தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அனுப்பட்ட 38 பேரும் உள்ளடங்குகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் வெலிசறை கடற்படை முகாமுக்குள் கண்டறியப்பட்ட 62 தொற்றாளர்களும் உள்ளடங்குகின்றனர்.

## ரூ.24,000 கோடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கின்றன.

பணப்புழக்கத்துக்குப் புதிய நோட்டுகள் தேவை என்ற அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டாலும் நாட்டின் நாணயத்தின் பெறுமதியை இது மோசமாக வீழ்த்திவிடும் என விடயமறிந்த வட்டாரங்கள் கவலை வெளியிடுகின்றன.

(உ)

## குடாநாட்டிலிருந்து 2 ஆயிரம் பேர் சொந்த ஊர்களுக்குத் திரும்பினர்

யாழ்ப்பாணத்துக்குவந்த போது கொரோனா நெருக்கடியால் சிக்கிக்கொண்டவர்களில் இரண்டாயிரம் பேர் சொந்த ஊர்களுக்கு திரும்பியுள்ளனர். இந்தத்தகவலை யாழ். மாவட்ட செயலர் க.மகேசன் உறுதிப்படுத்தியுள்ளார்.

வெளிமாவட்டத்தைச் சேர்ந்த ஐந்தாயிரம் பேர் தமது ஊர்களுக்குத் திரும்புவதற்கான விண்ணபங்களை கிராம அலுவர்கள் மூலம் முன்வைத்தனர் எனத் தெரிவித்த அவர், அவர்களில் 2000 பேர் தமது ஊர்களுக்கு திரும்பியுள்ளனர் என்றும் குறிப்பிட்டார்.

வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் தாம் தங்கியிருக்கும் பகுதிகளில் கிராம அலுவலர்களிடம் பதிவுகளை மேற்கொள்வதால் சுகாதார உத்தியோத்தர்களிடம் இருந்து மருத்துவ அறிக்கைகளைப்பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அதன் பின்னர் ஊர்களுக்கு திரும்புவதற்கு ஏற்பாடுசெய்யப்படும் என்றும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழில் நேற்றைய பரிசோதனைகளில் ஒருவருக்கும் வைரஸ் தொற்று இல்லை

யாழ்ப்பாணத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட கொரோனாத் தொற்று பரிசோதனைகளில் ஒருவருக்கும் தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டு உள்ளதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரரிவித்துள்ளார்.

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் 27 பேருக்கு நேற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் ஒருவருக்கும் தொற்று இல்லையென உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்கள் 4 பேர், வவுனியா பொது வைத்தியசாலையில் 4 பேர், வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு 10 பேர், புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ஒருவர், இரணைமடு தனிமைப்படுத்தல் நிலையம் 5 பேர், கொடிகாமம் தனிமைப் படுத்தல் நிலையம் 3 பேர் என மொத்தமாக 27 பேருக்கு நேற்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட நிலையில் இதில் ஒருவருக்கும் தொற்று இல்லை என உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

# ஊடகவியலாளர் அமரர் ரூபனின் பத்தாம் ஆண்டு நினைவேந்தல்

### பொன்னாலையில் இடம்பெற்றது







ஊடகவியலாளர் அமரர் சி.செ. ரூபனின் 10 ஆவது ஆண்டு நினைவேந்தல் பொன்னாலையில் நேற்று மாலை எளிமையாக இடம்பெற்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சம் காரணமாக மிக எளிமையாக இடம்பெற்ற இந்த நிகழ்வில், ரூபனின் சில நண்பர்கள் மட்டும் கலந்துகொண்டனர்.

ரூபனின் நினைவேந்தலை முன்னிட்டு தென்னங் கன்றுகளும் நடுகை செய்யப்பட்டன.

1995 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 'உதயன்' பத்திரிகையின் ஊடாக ஊடகத்துறைக்குள் கால் பதித்த ரூபன் 'தினக்குரல்', 'வலம்புரி', 'ஈழநாதம்' ஆகிய ஊடகங்களின் செய்தியாளராகவும் பணியாற்றினார். குறிப்பிட்ட காலம் 'புலிகளின் குரல்' வானொலியின் யாழ்.செய்தியாளராகவும் பணி புரிந்தார்.

யுத்தம்தீவிரம்பெற்றிருந்த காலத்தில், படையினரதும் புலனாய்வாளர்களதும் துணை ஆயுதக் குழுக்களினதும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் 'யாழ்.தினக்குரல்' பத்திரிகையின் உதவி ஆசிரியராக பணியாற்றினார்.

வன்னி யுத்தத்தில் மக்கள் கொத்துக்கொத்தாக கொல்லப்பட்டமை குறித்து கடும் மன உளைச்சலுக்கு உள்ளாகியிருந்த ரூபன், 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி சுகயீனம் காரணமாக சாவடைந்தார்.



# பாடசாலை, ஆஸ்பத்திரி தொடர்பான முடிவுகளுக்கு சந்திரகுமார் எதிர்ப்பு

கிளிநொச்சியில் கொரோனா நடவடிக்கைக்கு என அழகாபுரி பாடசாலையை விமானப்படையினர் பெற்றுக் கொண்டமை மற்றும் கொரோனா நோயாளர்களுக்கான சிகிச்சை அளிக்கும் மாகாண வைத்தியசாலையாக கிளிநொச்சியில் சுமார் பத்தாயிரம் வரையான பொது மக்களுக்கு சேவையளிக்கும் வைத்தியசாலை ஒன்றை தெரிவு செய்தமை ஆகியவற்றுக்கு முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் தனது கடும் ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வட மாகாண ஆளுநருக்கு எழுத்துமூலம் ஆட்சேபனையை தெரிவித்துள்ளமையோடு, அரசின் உயர் மட்டத்தினருக்கும், வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர், மாவட்ட அரச அதிபர் ஆகியோரின் கவனத்திற்கும் கொண்டு சென்றுள்ளார். இது தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் –

கிளிநொச்சி மாவட்டத்தில் அழகாபுரி அ.த.க.பாடசாலையானது இரணைமடு விமானப்படையினரால் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளருடன் அனுமதியுடன் கொரோனா நடவடிக்கைக்கு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இது அப்பிரதேசத்தில் வாழ்கின்ற பொது மக்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. பாடசாலையை சூழவும் கிராமத்திலும் மிகவும் நெருக்கமாக பொது மக்கள் வாழ்கின்றனர். எனவே இந்தப் பிரதேசத்தில் உள்ள பாடசாலையை விமானப் படையினர் பொறுப்பேற்றிருப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. எனவே இது தொடர்பில் அப் பிரதேச பொது மக்கள் சார்பாக எனது ஆட்சேபனையை தெரிவிக்கின்றேன்.

இதனைத் தவிர இனம் காணப்பட்ட கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு வட மாகாணத்தில் ஒரு சிகிச்சை நிலையமாக கிளிநொச்சியில் போக்குவரத்து நெருக்கடியுள்ள பின்தங்கிய பிரதேசங்களில் வாழ்கின்ற சுமார் பத்தாயிரம் வரையான பொது மக்களுக்கு சேவை வழங்கி வரும் ஒரு மருத்துவமனையைத் தெரிவு செய்வதும் பொருத்தமற்றது.

காலப்போக்கில் மாவட்டத்திற்கு ஒரு கொரோனா சிகிச்சை நிலையத்திற்கு தேவை ஏற்படுகின்ற போது மாவட்டத்தில் பொருத்தமான ஒரு வைத்தியசாலையினை தெரிவு செய்யலாம். ஆனால் தற்போதைய சூழ்நிலையில் எமது மாவட்டத்தின் நிலைமைகளை புரிந்துகொள்ளாது எடுக்கப்படுகின்ற தீர்மானங்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் இதனை மீள் பரிசீலனை செய்யுமாறும் சந்திரகுமார் கோரியுள்ளார். பிரதேச பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவர் உயரதிகாரிகளிடம் வலியுறுத்தியுள்ளார்.

மாவட்டத்திற்கு ஒரு கொரோனா வைத்தியசாலையை உருவாக்குவதாக அரசு தெரிவித்திருந்தது. இந்த நிலையில் வடமாகாணத்திற்கான கொரோனா வைத்தியசாலையாக கிளிநொச்சி அக்கராயன் வைத்தியசாலையை மாற்ற உயர்மட்ட கலந்துரையாடல்கள் நடந்து வருவது குறிப்பிடத்தக்கது.

**வேலைவாய்ப்பு – இரவுக் காவலாளி**

யாழ். நகரப்பகுதியில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு இரவுக்காவலாளி ஒருவர் தேவை. முழுநேரமாக தங்கிநின்று வேலைசெய்தால் உணவு, தங்குமிடம் வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 077 307 8799




**காலைக்கதிர் Kālaikkathir மாலைப்பதிப்பு**

விளம்பரம் (8cm x 5cm) பிரசுரிக்க!
கருப்பு வெள்ளை – ரூபாய் 500/-
முழு வர்ணம் – ரூபாய் 1000/-
தொடர்புகளுக்கு: 076 443 8622
kalaikkathiradvt@gmail.com

**புழுக்கொடியல் விற்பனைக்கு.**

சுத்தமான சுகாதாரமான முறையில் பொதியிடப்பட்ட புழுக்கொடியல் 1/2kg, 1/4kg பைக்கற்றுகளில் விற்பனைக்கு உண்டு. தேவைப்படின் வீடுகளுக்கும் விநியோகம் செய்யப்படும். (மேலதிக கட்டணத்துடன்)
தொடர்புகளுக்கு: 076 100 5277

**தோட்டக்காணி தேவை**

மரக்கறித் தோட்டம் செய்யக்கூடிய வளமான செம்மண் உள்ள காணி குத்தகைக்குத் தேவை. இரசாயண உரங்கள், கிருமிநாசினிகள் ஆகியவை பாவிக்காத காணி விரும்பத்தக்கது.
உரிய முறையில் பராமரித்து குத்தகை முடிவில் நல்ல நிலையில் திருப்பிக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 078 284 5000

**வீட்டுத்தோட்ட விதைகள் விற்பனைக்கு**

வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான விதைகள் விற்பனைக்கு உண்டு.
வெண்டி, பயிற்றை, கத்தரி, கீரை, தக்காளி, பாகல், மிளகாய், சோளம், பூசணி, முள்ளங்கி, பீற்றூட், புடோல், கறிமிளகாய், சிறகவரை.
(வீடுகளிற்கும் விநியோகிக்கப்படும்.)
தொடர்புகளுக்கு: 077 411 4422

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – onlinekathir.com

## ஆளுக்கு ஆள் மாறுபடும் நீதி

கொரோனாத் தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டமையை மக்கள் உணர்ந்து கொண்டுள்ளனர். கண்ணுக்குத் தெரியாத இந்த நுண்ணுயிரியை எதிர்ப்பதற்கு அதுவேசுதியன்று அவர்கள் பெரும்பாலும் புரிந்து கொண்டுள்ளனர்.

சுமார் ஒரு மாத காலம் ஊரடங்கு நீடித்த போது யாழ். மாவட்ட மக்களும், அதையும் தாண்டி ஒன்றரை மாத காலம் கொழும்பு போன்ற பிற இடங்களைச் சேர்ந்தோரும் பல்லைக் கடித்துக் கொண்டு ஊரடங்கைச் சகித்துக் கொண்டிருப்பதற்கு இந்தப் புரிந்துணர்வே காரணம்.

நாட்டில் பிறப்பிக்கப்பட்டிருப்பது சட்ட வலிமையற்ற ஊரடங்கே என்பது மக்களுக்கு நன்கு தெரியும். தெரிந்தும் கூட அதனை சவாலுக்கு உட்படுத்தாமல் அவர்கள் அதற்கு அடிபணிந்து – அர்ப்பணித்து – போவதற்கு இந்தப் பிரச்சினையின் ஆழமான பரிமாணங்களை அவர்கள் புரிந்து கொண்டிருக்கின்றமை தான் காரணம்.

பல அரசியல்வாதிகள் கூட அதனைப் புரிந்து கொண்டுதான் காரியமாற்றுகின்றனர். உதாரணத்துக்கு நமது யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை எடுத்துக் கொள்ளலாம்.

ஆளுநர், அரச அதிபரிலிருந்து, சுகாதார அதிகாரிகள் வரை இங்கிருந்து கொழும்பில் உயர்மட்ட மாநாடுகள், கூட்டங்களுக்குச் சென்று வருகின்றனர். அவர்களது அலுவலகப் பணி காரணமாக, மாவட்டத்தை விட்டு மாவட்டம் சென்று வர வேண்டிய தேவை அவர்களுக்கு உண்டு.

ஏன், இன்று அதிகம் செய்திகளில் அடிபடும் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் சத்தியமூர்த்தியின் நிலையை எடுத்துக் கொள்வோம். கொரோனாத் தொற்றாளர்கள் சிகிச்சைக்கு வரக்கூடிய யாழ். ஆஸ்பத்திரியில் அவர் பணி புரிகின்றார். தொற்றாளர்களை எதிர்கொள்ளக் கூடிய அதிக ஆபத்தான நிலையில் பணிபுரிபவர் அவர். ஆனாலும் அவரது வீடு கிளிநொச்சியில். அதனால் தனது வீட்டுக்கும் பணி புரியும் நிலையத்துக்கும் இடையில் மாவட்டம் கடந்து சென்றுவர அவர் அனுமதிக்கப்பட வேண்டும்; அனுமதிக்கப்படுகின்றார்.

இவர்கள் எல்லோருடனும் ஒப்பிடும்போது யாழ்ப்பாணம் வந்து செல்வதற்கு அமைச்சர் என்ற முறையில் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அதிக உரித்தும், அதிகாரமும் உண்டு.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் விமானத்தில் மாவட்டம் மாவட்டமாகப் பயணிக்கும் போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு விமானத்தில் யாழ். வந்து போவது வெறும் சிறு துரும்புவேலை.

அதுவும் தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கும் இந்தச் சமயத்தில் தமது பாரம்பரிய தேர்தல் மாவட்டமான யாழ்ப்பாணத்துக்கு வந்து அரசியல் வேலையைக் கவனிக்க வேண்டிய கட்டாயம் அவருக்கு உண்டு.

ஆனால், கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக மாவட்டங்களுக்கு இடையிலான போக்குவரத்துத் தடைப்பட்டிருக்கையில் தமது பதவி நிலைத் தகுதியை வைத்து அதை மீறுவது அழகல்ல என்று கருதி யாழ் வருகையை அவர் தவிர்த்து வருகின்றார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன.

அவர் அப்படிக் கடைப்பிடித்தாலும் கூட இங்கு தளத்தில் இது விடயம் வெளிப்படையானதாகவும், நேர்மையான முறையிலும் பின்பற்றப்படவில்லை என்று கூறப்படுகின்றது.

இந்தத் தடையால் கொழும்பில் சிக்கல்பட்டு நீண்ட காலம் தாக்குப்பிடிக்க முடியாமல், வேறு வழியின்றி லொறிகளில் ஒளித்திருந்து யாழ் வந்து சேர்ந்த எண்மரை பெரும் தேசத் துரோகிகள் போல கணித்துத் தேடிப்பிடித்து மடக்குகின்றார்கள்.

ஆனால் யாழ். மாவட்டத்தில் சிக்குப்பட்டிருந்த வெளிமாவட்டத்தவர்கள் இரண்டாயிரம் பேரைத் திருப்பி அனுப்பி வைத்திருக்கின்றோம் என்றும், மூவாயிரம் பேர் இன்னும் காத்திருக்கின்றனர் என்றும் யாழ். அரச அதிபர் கூறினார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

அந்த இரண்டாயிரம் பேர் எப்படி அனுப்பி வைக்கப்பட்டார்கள், அவர்களுக்கு இந்தத் தனிமைப்படுத்தல், சோதனை எல்லாம் இல்லையா, அவர்களை மாவட்டத்துக்கு வெளியே அனுப்பி வைப்பதில் கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறை யாது என்பவை எல்லாம் தெரியவில்லை. அதில் வெளிப்படைத் தன்மை இருப்பதாகவும் புரியவில்லை.

இதேநேரம், வெளிமாவட்டங்களில் இருந்து 22 நபர்கள் கிளிநொச்சிக்குள் சுதந்திரமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். எனினும் அவர்கள் தொடர்பில் உரிய சுகாதார நெறிமுறை பின்பற்றப்படவில்லை என்றும் கூட தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலிடத்து அழுத்தத்தின் பேரில் இந்த 22 பேரையும் அனுமதித்துக் கொண்டு, கஷ்டத்தில் வந்து சேர்ந்த எண்மரை மட்டும் நீதிமன்றத்துக்குக் கொண்டு போய் தனிமைப்படுத்தலில் வைத்திருப்பது அதிகாரவர்க்கம் செய்யும் பெரும் அநீதியாகும்.

அதிகாரவர்க்கம் மக்களுக்கு முன்னால் மண்டியிட்டு உண்மையை வெளிப்படுத்த முன்வரவேண்டும். செய்வார்களா?

# போர்க்கொடி! சுகாதார அமைச்சுக்கு எதிராக அரச பகுப்பாய்வாளர்கள் சங்கம்

## கொரோனா பரிசோதனைகள் முடக்கம் குறித்து விசனம்

கொழும்பு, ஏப்ரல் 25

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்து வருகின்ற நிலையில், அது தொடர்பான பரிசோதனைகளை சுகாதார அமைச்சு மழுங்கடிக்க முயற்சிப்பதாக, சிறிலங்கா அரச இரசாயனபகுப்பாய்வுத் தொழில்நுட்பவியலாளர்கள் குற்றம் சுமத்தி இருக்கின்றனர். இதுதொடர்பாக அந்தச் சங்கத்தினால் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் சுகாதார அமைச்சின் கீழ் போதிய அளவான பரிசோதனைக் கட்டமைப்பு இருக்கின்ற போதும், அவற்றைச் சரியாக பயன்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்கவில்லையென அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக நாடெங்கிலும் சுகாதார அமைச்சினால் வைரஸ் ஆய்வு மையங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்ற போதும், மருத்துவ பரிசோதனை நிறுவனம் ஊடாக மாத்திரமே இந்த பரிசோதனைகள் இப்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன் சுகாதார அமைச்சின் கீழ் நாளாந்தம் அதிக எண்ணிக்கையான பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான வளங்கள் இருக்கின்ற போதும், அங்கு வளப்பற்றாக் குறை நிலவுவதான தோற்றப்பாட்டை உருவாக்க சுகாதார அமைச்சு முயற்சி செய்கிறது.

தேசிய தொற்றுநோயியல் பிரிவின் கொரோனா பரிசோதனைக்கான நடவடிக்கைகளை ஊக்குவிக்காது அமைச்சுச் செயற்படுகின்றது.

– இப்படிப் பல குற்றச்சாட்டுகளை அந்த சங்கம் கடிதத்தில் முன்வைத்திருக்கிறது.

இவை தொடர்பாக விசாரணைகளை நடத்தி, உரிய பரிசோதனைகளை விரைவாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்த கடிதத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

# அரிசிக்கு சிவப்பு நிறமூட்டிய வர்த்தகர் குற்றத்தை மன்றில் ஒப்புக்கொண்டார்



மட்டக்களப்பு – ஏறாவூர்ப் பிரதேசத்தில் அரிசிக்கு சிவப்பு நிறமூட்டம் செய்து விற்பனைக்காககளஞ்சியப்படுத்தியிருந்தவேளை கைது செய்யப்பட்ட விற்பனை நிலைய உரிமையாளருக்கு நீதிமன்றினால் இருபதாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் யு.எல். அப்துல் மஜீது நீதிமன்றுக்கு தெரிவித்த குற்றச்சாட்டிற்கிணங்க விற்பனை நிலையத்தின் உரிமையாளர் சுற்றுலா நீதிமன்றில் ஆஜராகி குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

இதனையடுத்து நீதிபதி அவருக்கு 20 ஆயிரம் ரூபா அபரா தம் விதித்தமையுடன், எதிர்காலத்தில் இவ்வாறு கலப்படம் செய்வது கண்டுபிடிக்கப்படுமிடத்து வர்த்தக நிலையத்தின் அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படுமென எச்சரிக்கையும் விடுத்தார்.

# அரசைப் பலவீனப்படுத்த எதிர்த் தரப்பு அரசியல் சூழ்ச்சி என்கிறார் வீரவன்ஸ



அரசாங்கத்தைப் பலவீனப்படுத்த எதிர்த் தரப்பினர் அரசியல் சூழ்ச்சியில் ஈடுபட்டுள்ளனர் என அமைச்சர் விமல் வீரவன்ஸ குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாடு தற்போது பாரிய சவால்களுக்கு முகம் கொடுத்துள்ள நிலையில் அரசிமைப்பு ரீதியான நெருக்கடி மீண்டும் ஏற்படுவதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது.

எனினும் அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு எதிர்தரப்பினர் அரசமைப்பு நெருக்கடியைத் தோற்றுவிக்க முயற்சிக்கின்றனர்.

ஜனாதிபதியால் மாத்திரமே கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை, புதிய அரசாங்கம் தோற்றம் பெற முன்னர் கூட்ட முடியாது என்பதை எதிர்க்கட்சியினர் நன்கு அறிந்தும் நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கு மாற்று வழிமுறைகளைத் தேடுகின்றார்கள்.

கொரோனா வைரஸ் தாக்கத்தைக் குறிப்பிட்டுக் கொண்டு நாட்டைத் தொடர்ந்து முடக்க முடியாது. பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்த அரசாங்கத்தையே பொறுப்பேற்றுள்ளோம்.

பொருளாதாரத்தை மேம்படுத்த சிறந்த திட்டங்கள் அனைத்து அமைச்சின் ஊடாகவும் செயற்படுத்தவுள்ளன. – என மேலும் அவர் தெரிவித்தார்.

ஊடகக் குருகுலம்

ஊடக ஜாம்பவான் திரு வித்தியாதரன் மற்றும் காலைக்கதிரின் அனுபவம்மிக்க ஆசிரியர் குழுவின் கீழ் ஊடகத்துறையினை கற்க ஓர் அரிய சந்தர்ப்பம்.
அச்சு ஊடகம், இலத்திரனியல் ஊடகம் ஆகியவற்றை அடிப்படையில் இருந்து கற்றுத் தேர்ந்திட காலைக்கதிரின் ஊடக குருகுலத்தில் இணையுங்கள்.
ஊடகத்துறையில் ஆர்வமுள்ள யாரும் இணைந்துகொள்ளலாம்.
உங்களின் சுயவிபரக்கோவையினை
kalaikkathironline@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.
தொடர்புகளுக்கு: 076 443 8623
தகவல் – நிர்வாகி
பசுமை ஊடகம்

முடக்க காலத்தில் பெண்கள் கடைக்கு செல்லவேண்டாம்

# ஜப்பானில் மேயர் ஒருவரின் கருத்தால் வெடித்தது சர்ச்சை

ஜப்பானில் அவசரநிலை கடைபிடிக்கப்பட்டுள்ள நிலையில் ஒசாகா மேயர் ஆண்கள் மட்டுமே பொருட்கள் வாங்க வெளியில் செல்லவேண்டும் எனக் கூறியது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

கொரோனாவின் பார்வை ஜாப்பான் பக்கமும் திரும்பியுள்ளது. இதனால் நாடு முழுவதும் அவசரநிலை கடைபிடிக்கப்பட்டுள்ளது. மே முதல் வாரம் வரை அவசரநிலை தொடர இருக்கிறது.

டோக்கியோவுக்கு அடுத்தப்படியாக ஒசாகாவில் ஆயிரத்து 500 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். சமூகப் பரவலைத் தடுக்க இடைவெளியை கடைபிடிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பெண்கள் கடைக்குச் சென்றால் பொருட்களை வாங்க நீண்ட நேரம் ஆகும். இதனால் ஆண்கள் மட்டுமே கடைக்குச் செல்ல வேண்டும் என ஒசாகா மேயர் இச்சோரி மட்சுய் தெரிவித்துள்ளார். மேலும், திருமணம் முடிந்தவர்கள் ஜோடியாக கடைக்குச் செல்லக்கூடாது என்றும் தெரிவித்துள்ளார். இது விமசர்னத்தை ஏற்படுத்தியுள்ளது.

"பெண்கள் கடைக்குச் சென்றால் அவர்கள் நீண்ட நேரம் எடுத்துக் கொள்வார்கள். ஆண்கள் சென்றால், இந்தஆ பொருட்கள் வேண்டும் என்பார்கள். இருக்கும் இடத்தை காட்டினால், நேராக சென்று வாங்குவீர்கள். அதன்பின் வீடு திரும்பி விடுவீர்கள். இதனால் தொடர்பை தவிர்க்க ஆண்கள் கடைக்குச் செல்வதுதே சிறந்தது" என்றார் ஒசாகா மேயர் இச்சோரி.

இதற்கு கடும் விமர்சனம் கிளம்பியுள்ளது. "ஜப்பான் போன்ற நாட்டில் இதுபோன்ற ஒரு வார்த்தை மேயரிடம் இருந்து வருவது வருந்தத்தக்கது" என்று ஒருவர் தெரிவித்தார்.

மேயரின் கருத்தைப் பார்த்தால் "பெற்றோர்கள், வீட்டு வேலை செய்பவர்கள், மருத்துவ உதவி செய்பவர்கள் பற்றி அவர்கள் போதுமான அளவிற்கு சிந்திக்கவில்லை" என மற்றொருவர் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

## துருக்கி வான் படை தாக்குதல்களில் குர்திஷ் படையினர் 8 பேர் உயிரிழப்பு

ஈராக் நாட்டின் எல்லைக்குள் துருக்கி நடத்திய வான்வெளி தாக்குதலில் குர்திஷ் தொழிலாளர் கட்சியின் ஆயுதப் படையினர் 8 பேர் உயிரிழந்தனர்.

துருக்கி, ஈராக், சிரியா ஆகிய நாடுகளின் சில பகுதிகளை ஒருங்கிணைத்து குர்திஷ்தான் என்ற தனி நாட்டை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் செயல்பட்டு வருகின்றனர் குர்திஷ்தான் தொழிலாளர்கள் கட்சியினர்..

இந்தக் குழுவை அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் துருக்கி உள்ளிட்ட நாடுகள் நாடுகள் பயங்கரவாத அமைப்பாக அறிவித்துள்ளன.

ஈராக் நாட்டின் வடக்கு பகுதியில் ஆதிக்கம் செலுத்திவரும் குர்திஷ் கிளர்ச்சியாளர்கள் கான்டில் மலைப்பகுதியில் முகாம்களை அமைத்துள்ளனர்.

மேலும், இங்கிருந்தவாறு துருக்கி எல்லையில் தாக்குதல்களை அவ்வப்போது நடத்தி வருகின்றனர். இந்த படையினரை ஒடுக்கும் பணியில் துருக்கி நாட்டின் விமானப்படைகள் ஈடுபட்டுள்ளன. ஈராக் நாட்டின் கான்டில் மலைப் பகுதியில் அமைந்துள்ள ஹாரா மாகாணத்தில் பதுங்கி இருந்த குர்திஷ்தான் தொழிலாளர் கட்சியை சேர்ந்த ஆயுதப் படையினரைக் குறி வைத்து துருக்கி நாட்டின் விமானப்படை வெள்ளிக்கிழமை வான் தாக்குதல் நடத்தியது.

இந்த தாக்குதலில் 8 குர்திஷ் ஆயுதப் படையினர் கொல்லப்பட்டனர் என்று துருக்கி ராணுவம் தெரிவித்துள்ளது.

## 9.5 லட்சத்தை எட்டியது அமெரிக்காவில் தொற்று

### உயிரிழப்பும் 52 ஆயிரத்தை கடந்து ஏகிறுகின்றது

அமெரிக்காவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒன்பதரை லட்சத்தை நெருங்கியுள்ளது. உயிரிழப்ப 52 ஆயிரத்தைத் தாண்டி வேகமாக முன்னேறி வருகின்றது.

உலகில் உள்ள 210 நாடுகள் மற்றும் தன்னாட்சி நிலங்களில் கொரோனா தொற்றுப் பரவியுள்ளது. நேற்றிரவு வரையில் உலகம் முழுவதும் 28 லட்சத்து 64 ஆயிரத்துக்கும் அதிகமானவர்களுக்கு இந்தத் தொற்றுப் பரவியிருந்தது. அவர்களில் 8 லட்சத்து 16 ஆயிரம் பேர் குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

அமெரிக்காவே தனியொரு நாடாக அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளது. 9 லட்சத்து 29 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் அங்கு பாதிக்கப்பட்டுள்ளார்கள். 52 ஆயிரத்து 371 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். ஒரு லட்சத்து 10 ஆயிரம் பேர் குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளார்கள்.

அமெரிக்காவில் தனியொரு மாநிலமாக நியூயோர்க் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு மட்டும் 2 லட்சத்து 77 ஆயிரம் பேருக்குத் தொற்று ஏற்பட்டுள்ளது. 21 ஆயிரத்து 291 பேர் உயிரிழந்திருக்கின்றனர்.

அதற்கடுத்ததாக நியூயேர்சி மாநிலத்தில் அதிகளவு பாதிப்பு பதிவாகியுள்ளது. ஒரு லட்சத்து 2 ஆயிரம் பேருக்கு அங்கு தொற்று ஏற்பட்டுள்ளது. 5 ஆயிரத்து 517 பேர் உயிரிழந்திருக்கின்றனர்.

அமெரிக்காவில் நேற்று மட்டும் 38 ஆயிரத்து 958 பேருக்குப் புதிதாகத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. ஆயிரத்து 956 பேர் உயிரிழந்திருக்கிறார்கள்.


## பெரும்பாலும் சமூகத் தொற்றால் பாகிஸ்தானில் கொரோனா பரவல்

பாகிஸ்தான் நாட்டின் மொத்த கொரோனா பாதிப்பில் 79 சதவீதம் சமூக பரவல் மூலம் ஏற்பட்டுள்ளதாக அந்த நாட்டின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் கொரோனா வைரஸ் பாதிப்பு நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. அங்கு வைரஸ் பரவலின் வேகம் தீவிரமாக உள்ளது. இந்த நிலையில் அந்த நாட்டின் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

வெள்ளிக்கிழமை மாலை 4 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் 642 பேருக்குக் கொரோனா வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்டது. இதன் மூலம் பாகிஸ்தானில் கொரோனா வைரஸ் பாதிப்புக்கு ஆளானவர்களின் எண்ணிக்கை 11 ஆயிரத்து 155 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் உயிரிழப்பு எண்ணிக்கையும் 237 ஆக உயர்ந்துள்ளது. 2 ஆயிரத்து 527 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். நாட்டின் மொத்த கொரோனா பாதிப்பில் 79 சதவீதம் சமூகப் பரவல் மூலம் ஏற்பட்டது தெரியவந்துள்ளது.



மேலும், மே மாத இறுதி மற்றும் ஜூன் மாதத் தொடக்கத்தில் கொரோனா பாதிப்பு அதிகமாக இருக்கும் என்று மருத்துவ நிபுணர்கள் எச்சரித்தனர். பாகிஸ்தானில் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்த பிரதமர் இம்ரான்கான் தலைமையிலான அரசு தீவிர முன்னெச்சரிக்கைகளை எடுத்து வருகிறது - இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பாகிஸ்தானுக்கு வென்டிலேட்டர் அமெரிக்கா வழங்கும்: ட்ரம்ப்!



பாகிஸ்தானுக்கு கொரோனா சிகிச்சைக்கான வெண்டிலேட்டரை வழங்குவோம் என அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் கூறியுள்ளார்.

வெண்டிலேட்டர் (செயற்கை சுவாச கருவி) தேவைப்படும் உலகத் தலைவர்களுடன் நான் பேசினேன். அவர்களின் தேவையை பூர்த்தி செய்ய அமெரிக்கா உதவும் என்று கூறினேன். அந்த வகையில், பாகிஸ்தானுக்கு வெண்டிலேட்டர் அனுப்பி வைப்போம்.

ஸ்பெயின், இத்தாலி, மெக்சிகோ, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கும் வெண்டிலேட்டர்கள் அனுப்பி வைப்போம். - இவ்வாறு அவர் கூறினார்.

பாகிஸ்தானுக்கு வெண்டிலேட்டர் இலவசமாக கொடுக்கப்படுகிறதா? அல்லது விலைக்கு அளிக்கப்படுகிறதா? என்று அவர் எதுவும் கூறவில்லை.

## பங்களாதேஷில் இப்தாருக்கு தடை

முஸ்லிம் மக்களை பெரும்பான்மையாக கொண்ட பங்களாதேஷில் ரம்ஜான் மாதம் முழுவதும் இப்தார் விருந்து நிகழ்ச்சிகளை நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

கொலைகார கொரோனா வைரஸ் ஒட்டுமொத்த உலகையும் உலுக்கி வருகிறது. இதனால் சர்வதேச அளவில் பல முக்கிய நிகழ்வுகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில் முஸ்லிம்களின் புனித ரம்ஜான் மாதம் தொடங்கியுள்ளது. கொரோனா வைரஸ் பரவல் அச்சம் காரணமாக, எப்போதும் இல்லாத வகையில் கடும் கட்டுப்பாடுகளுடன் புனித ரம்ஜான் நோன்பை கடைப்பிடிக்க தங்கள் நாட்டு மக்களை வளைகுடா நாடுகள் அறிவுறுத்தியுள்ளன.

சவுதிஅரேபியாவில் உள்ள முஸ்லிம்களின் புனித தலங்களான மெக்கா, மதீனாவில் மக்கள் தொழுகை நடத்த தடைவிதிக்கப்பட்டுள்ளதால் வீட்டிலேயே தொழுகை நடத்த உள்ளனர். இந்த நிலையில் முஸ்லிம் மக்களை பெரும்பான்மையாக கொண்ட பங்களாதேஷில் ரம்ஜான் மாதம் முழுவதும் இப்தார் விருந்து நிகழ்ச்சிகளை நடத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அந்த நாட்டின் மத நல அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், சமூக இடைவெளியை உறுதி செய்யும் விதமாக இப்தார் விருந்து நிகழ்ச்சியை ஏற்பாடு செய்யவோ, பங்கேற்கவோ எந்தவொரு அமைப்புக்கும் மற்றும் தனிநபருக்கு அனுமதி கிடையாது. இந்த உத்தரவை மீறுபவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ரம்ஜான் பண்டிகையின் போது சிறப்புத் தொழுகை நடத்த ஒரு மசூதியில் 12 பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் என்றும், மற்ற நாட்களில் மக்கள் மசூதிகளில் கூடுவதற்கு முழுவதுமாக தடைவிதிக்கப்படுவதாகவும் அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## ஜூன் 30ஆம் திகதி வரை உ.பியில் பொது இடங்களில் கூடத் தடை!

ஜூன்30ஆம்திகதிவரை பொது இடங்களில்மக்கள் கூடுவதை அனுமதிக்க வேண்டாம் என அதிகாரிக ளுக்குஉத்தரபிரதேசமுதல் வர் யோகி ஆதித்யநாத் உத்தரவிட்டார்.

கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்க இந் தியா முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட் டுள்ளது. அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டும் பல்வேறு கட்டுப்பாடுகளு டன் விலக்கு அளிக்கப்பட் டுள்ளது.

மேலும், கொரோனா தீவிரமாக பரவும் அபாயம் உள்ள பகுதிகளில், அந் தந்த மாநில சூழ்நிலைக ளுக்கு ஏற்ப முழு ஊரடங் கும் விதிக்கப்படுகிறது.

இந்த நிலையில், வரும் ஜூன் 30 வரை பொது இடங் களில் மக்கள் கூடுவதை தவிர்க்கவேண்டும் என உத்தர பிரதேச அரசு கூறி உள்ளது.

ஜூன்30ஆம்திகதிவரை பொது இடங்களில்மக்கள் கூடுவதை அனுமதிக்க வேண்டாம் என அதிகாரி களுக்கு உத்தர பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் உத்தரவிட் டுள்ளார்.

சூழ்நிலையைபொறுத்து அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து முடிவெடுக்கப்படும் என்றும் கூறியிருக்கிறார்.

## தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளமையால் சம்பளம் கொடுக்க நிர்ப்பந்திக்க முடியாது!

### இந்திய நாடாளுமன்ற குழு அறிக்கை

கொரோனா வைரஸுக்கு எதிரான ஊரடங்கால் இந்தியாவில் தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டுள்ள நிலையில் அவற்றின் ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்குமாறு கட்டாயப்படுத்த முடியாது என இந் திய நாடாளுமன்றக் குழு அறிக்கை விடுத்துள்ளது.

கொரோனா வைரசுக்கு எதிரான ஊரடங்கால் நாட்டில் தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன.

இது தொடர்பான அறிக்கையை தொழிலாளர்கள் நலனுக்கான நாடாளுமன்றக் குழு தலைவரும், பார திய ஜனதாக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான பர்த்ருஹரி மகாதேவ், நாடாளுமன்ற சபாநாயகர் ஓம்பிர்லாவிடம் இணையம் வழியாகச் சேர்ப்பித்தார்.

அந்த அறிக்கையில் கூறி இருப்பதாவது:

நில நடுக்கம், வெள்ளம், புயல் உள்ளிட்ட இயற் கைப் பேரழிவுகளால், நிறுவன அதிபரின் தவறாக இல்லாமல் பல தொழில் நிறுவனங்களும் மூடப்ப டுகின்றன. அந்த நிறுவனங்கள் மீண்டும் செயல்படு கிற வரையில், பணியாளர்களுக்கு சம்பளம் கொடுக்க வேண்டும் என்பதை நியாயப்படுத்த முடியாது.

தற்போது கொரோனா வைரஸுக்கு எதிரான ஊர டங்கால் தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. எனவே அவற்றின் ஊழியர்களுக்கும் சம்பளம் கொடுக்குமாறு கட்டாயப்படுத்த முடியாது - என்றுள்ளது.

இந்த அறிக்கையில் 100 அல்லது அதற்கு மேற் பட்ட தொழிலாளர்களைக் கொண்ட ஒரு தொழில் நிறுவனத்துக்குப் பொருந்தக்கூடிய பணி நீக்கம், நிறு வனத்தை மூடுதல் போன்றவற்றுக்கு ஏற்கனவே உள்ள வழி வகைகள் 300 தொழிலாளர்களைக் கொண்ட நிறுவனத்துக்கும் ஏற்றதாகச் செய்யவேண் டும் எனப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இதுபோன்று செய்யப்பட்டுள்ள பரிந்துரைகள் மீது தொழிலாளர்கள் நலனுக்கான நாடாளுமன்ற குழுவின் உறுப்பினர்களான கே.சுப்பராயன் (இந் திய கம்யூனிஸ்டு கட்சி), எம்.சண்முகம் (தி.மு.க.), இளமரம் கரீம் (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு) ஆகியோர் எதிர்கருத்துகளை பதிவு செய்திருக்கின்றனர். அந் தக் கருத்துக்களும் அறிக்கையில் உள்ளடக்கப்பட் டுள்ளன.

## தமிழகத்தில் கொரோனா 1,821 ஆக அதிகரிப்பு

கொரோனா வைரசின் தாக்கம் தமிழகத்தில் நாளுக்கு நாள் அதி கரித்து வருகிறது. கடந்த 1 ஆம் திகதி முதல் கொரோனாவால் பலர் பாதிக்கப்பட்டு வருகின் றனர்.

கொரோனா பரவலைக் கட் டுப்படுத்த தடை உத்தரவு பிறப் பிக்கப்பட்டுள்ள போதிலும், தொடர்ந்து கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது.

இதற்கிடையே, தமிழக அரசு நேற்றுமுன்தினம் வெளியிட்ட தகவலின்படி, தமிழகத்தில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண் ணிக்கை 1,755 ஆக இருந்தது.

இந்நிலையில், தமிழகத்தில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிப்பு அடைந்தோர் எண் ணிக்கை 1, 821 ஆக அதிகரித்துள் ளது.

இதுதொடர்பாக, தமிழக சுகாதாரத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகத்தில் கொரோனா வைரசால் இன்று மேலும் 66 பேர் பாதிப்பு அடைந் துள்ளனர். இதையடுத்து கொரோனாவால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 1821 ஆக உயர்ந்துள்ளது என தெரி வித்துள்ளது.

## கொரோனா வினோதம்!



பிரசவ வலியில் துடித்தபோது கர்ப்பிணிப் பெண்ணை மருத்துவ மனையில்சேர்க்கஉதவியபொலிஸ் காவலர் ஒருவரின் பெயரையே தமது குழந்தைக்கு வைத்தனர் பெற்றோர். இந்தியத் தலைநகர் டெல்லியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வசீர்பூர்நகரில் வசிக்கும் விக் ரம் மற்றும் அனுபா தம்பதியரே தமது ஆண் குழந்தைக்கு தய வீர் என்ற காவலரின் பெயரைச் சூட்டினர்.

காவலர் தயவீர் உரிய நேரத் தில் செய்த உதவியை நினை வில் கொள்ள வேண்டும் என்ப தற்காக தம்பதிதங்களுக்கு பிறந்த குழந்தைக்கு அவரது பெயரைச் சூட்டினர் எனப் பெற்றோர் தெரி வித்தனர்.

நிறைமாதகர்ப்பிணியான அனு பாவுக்கு வியாழக்கிழமை காலை 7 மணியளவில் திடீரென பிரசவ வலி ஏற்பட்டது. கணவர் விக்ரம் உடனடியாக ஆம்புலன்ஸுக்குத் தகவல் கொடுத்தார். ஆனால், ஆம்புலன்ஸ் வரத் தாமதமானது.

இதையடுத்து தனது குடியிருப்பு பகுதிக்கு உட்பட்ட அசோக் விஹார் காவல் நிலையத்தைத் தொடர்பு கொண்டு நிலைமையை விவரித் தார் விக்ரம்.

அவர் கொடுத்த தகவலை அடுத் துக் காவல் நிலையத்தில் பணியில் இருந்த பொலிஸ் அதிகாரிகள் காவலர் தயவீர் (வயது 31) என்பவரை தம்பதியருக்குத் தேவையான உத விகளைச் செய்யுமாறு அறிவு றுத்தினர்.

உடனடியாக அருகில் இருந்த தனது வீட்டிற்கு சென்ற தயவீர் தனது சொந்தக் காரை எடுத்துக்



கொண்டு விக்ரம் - அனுபா தம்பதி யினரின் வீட்டிற்கு விரைந்து சென்றார். அங்கு பிரசவ வலியில் துடித்த அனுபாவை தனது காரில் ஏற்றிக் கொண்டு அருகில் உள்ள மருத்து வமனைக்கு அழைத்து சென்றார்.

மருத்துவமனையில் அனும திக்கப்பட்ட சில மணி நேரத்திலேயே அனுபாவுக்கு அழகான ஆண் குழந்தை பிறந்தது. தாயும், குழந் தையும் தற்போது நலமுடன் உள் ளனர்.

## வெளிமாநில தொழிலாளர்களை சொந்த ஊர் திரும்ப விடுங்கள்!

### முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம் வலியுறுத்து



மே 3ஆம் திகதிக்குப் பிறகு வெளிமாநில தொழிலாளர்கள் தமது சொந்த ஊர் செல்ல அனுமதிக்க வேண்டும் எனக் காங்கிரஸ் கட் சியின் மூத்த தலைவர் ப.சிதம்பரம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மே 3ஆம் திகதி நாடு தழுவிய ஊரடங்கு முடிவுக்கு வந்ததும், வெளிமாநிலத் தொழி லாளர்களைக் கடுமையான சுகாதார பாதுகாப்பு கட்டுப்பாடுகளுடன் அவர்களுடைய சொந்த ஊர்களுக்கு செல்ல அனுமதிக்க வேண்டும் என்று தனது டுவிட்டர் பதிவில் வலியுறுத்தியுள் ளார் முன்னாள் நிதி அமைச்சரான சிதம்பரம்.

புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் தங்கள் சொந்த மாநிலங்களுக்குச் சென்று குடும்பத்தி னரைச் சந்திப்பதிலும், தங்கள் மொழி பேசும் மக்களுடன் கலந்துரையாடுவதிலும் மிகுந்த ஆவலுடன் இருக்கின்றனர் எனவும், ஊரடங்கு என்ற பெயரில் அவர்களுடைய இந்த ஆவலை நீண்ட நாட்கள் தடுத்து நிறுத்தக்கூடாது என் றும் அதில் அவர் குறிப்பிட்டு உள்ளார்.

இது தொடர்பாக காங்கிரஸ் உயர் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை யும் ப.சிதம்பரம் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

## இந்தியாவில் கொரோனா அதிகரிப்பு விகிதாசாரம் 21 இலிருந்து 8க்கு சரிந்தது

இந்தியாவில் ஊரடங்கும், கட்டுப்பாடு களும் தீவிரமாக நடைமுறைப்படுத்தப் பட்டதால் கொரோனா அதிகரிப்பு விகிதம் வெகுவாகச் சரிந்து தற்போது 8.1 சதவீத மாக குறைந்திருக்கிறது என்று கொரோனா நடவடிக்கைக் குழு தெரிவிக்கிறது. .

நாடு முழுவதும் கடந்த மாதம் 24ஆம் திகதி ஊரடங்கு நடைமுறைப்படுத்தப் பட்டது. இந்த ஊரடங்கு மே 3ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. வெள்ளிக் கிழமையுடன் இந்தியாவில் ஊரடங்கு நடைமுறைக்கு வந்து ஒரு மாதம் முடிந்து விட்டது.

இந்த ஒரு மாத காலத்தில் நோய் அதி கரிப்பு விகிதம் வெகுவாக குறைந்திருக் கிறது என கொரோனா நடவிக்கைக் குழு தெரிவிக்கின்றது. அதாவது ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்ட அன்று நாடு முழுவதும் 500 நோயாளிகள் இருந் தனர். அப்போது ஒவ்வொரு நாளும் அதன் அதிகரிப்பு விகிதம் 21.6 சதவீத மாக இருந்தது.

ஊரடங்கும், கட்டுப்பாடுகளும் தீவிர மாக நடைமுறைப்படுத்தப்பட்டதால் அதி கரிப்பு விகிதம் வெகுவாகச் சரிந்து தற் போது 8.1 சதவீதமாகக் குறைந்திருக் கிறது. ஜெர்மனியில் ஊரடங்கு அமல்படுத் தப்பட்டதற்கு பிறகு அதிகரிப்பு விகிதம் 2 சதவீதமாகவும், அமெரிக்காவில் அதி கரிப்பு விகிதம் 4.8 சதவீதமாகவும் குறைந் தன.

இந்தியாவில் தற்போதைய அதிகரிப்பு விகிதத்தின்படி கணக்கிட்டுப் பார்த்தால் அடுத்த வாரம் இறுதியில் 40 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்று கணக்கிடப்பட்டு இருக்கிறது.

அடுத்த 2 வாரத்தில் 70 ஆயிரம் பேரும், மே மாதம் இறுதியில் இரண்டரை லட்சம் பேரும், பாதிக்கப்பட இருப்பதாக புள்ளி விவரம் தெரிவிக்கிறது.

இந்தியாவில் ஆரம்பத்தில் நோயாளி கள் எண்ணிக்கை 4 நாட்களில் 2 மடங் காக அதிகரித்தது. அது இப்போது குறைந்து 10 நாட்களில் 2 மடங்கு ஆகிறது.

இதுபற்றி மத்திய அரசு அமைத்துள்ள கொரோனா நடவடிக்கை குழு தலைவர் வி.கே.போல் கூறும்போது, இந்தியாவில் சரியான நேரத்தில் ஊரடங்கு மற்றும் கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப் பட்டன. இதனால் பாதிப்புக் குறைவாகவே இருக்கிறது.

உரிய நேரத்தில் கட்டுப்பாடுகள் கொண்டு வராவிட்டால் இன்று நோயாளி கள் எண்ணிக்கை 1 லட்சத்தை தாண்டி இருக்கும்.

ஊரடங்கு காரணமாக ஏப்ரல் 6ஆம் திகதிக்குப் பிறகு நோய் பரவுதல் குறையத் தொடங்கியது. மே மாதம் மத்தியில் வரை இதன் அதிகரிப்பு விகிதம் நீடிக்கலாம் என்று கூறினார்.

**இன்று தந்தை செல்வாவின் 43 ஆவது நினைவுநாள். அதையொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.**

– பா.அரியநேத்திரன் –

# இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சியின் மூலம்

# தந்தை செல்வாவே!



வரலாறுகள் படைத்த தலைவர்களும் இருக்கிறார்கள், வரலாற்றைக்கொண்ட தலைவர்களும் இருக்கின்றார்கள்.

எம் தாய்த்தேசத்தின் தந்தை என்று போற்றப்படும் பெருந்தலைவர் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் மலேசியாவின் ஈப்போ நகரில் 1898ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி பிறந்தார். 1977 ஏப்ரல் 26 ஆம் திகதி எம்மைவிட்டு பிரிந்தார். இன்று அன்னாரின் 43 ஆண்டு நினைவு நாளாகும்.

தந்தை செல்வா என்ற பெரும் தலைவர் பிறக்காமல் இருந்திருந்தால் வடக்கு, கிழக்கு தமிழர்தாயகம் என்று பேசக்கூடிய நிலைகூட உருவாகி இருக்காது.

குறிப்பாக கிழக்கு தமிழர்களுக்கு முகவரி கொடுத்த பெருமை தந்தை செல்வா அவர்களையே சாரும்.

1948ஆம் ஆண்டு மார்கழி மாதம் 18ஆம் திகதி சமஷ்டி கட்சி தமிழில் தமிழரசுக்கட்சியாக மலர்ந்தது. எனினும், அப்போது தமிழ் மக்கள் சமஷ்டி அரசமைப்பை ஆதரிக்கவில்லை. 1952ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் இரு தொகுதிகளிலேயே கட்சி வெற்றி பெற்றது. கோப்பாய் தொகுதியில் அமரர் கு.வன்னியசிங்கம் வெற்றி பெற்றார். அதுபோலவே திருகோணமலையில் அமரர் இராஜவரோதயம் வெற்றி பெற்றார். திருகோணமலை திருக்கோணேஸ்வரக் கோயிலின் தர்ம கர்த்தாவாக



இருந்த அன்னவர்தான் தமிழரசுக்கட்சியின் வீட்டு சின்னத்தை வடிவமைத்து கொடுத்தவர்.

அன்றைய நாடாளுமன்றம் காலி முகத்திடலுக்கு அருகில் இருந்தது. தமிழரசுக்கட்சியினரும் தமிழ் மொழி உரிமையில் கரிசனை கொண்டவர்களும் காலி முகத்திடலில் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர். சிங்கள இனவாதிகளும், அடாவடியில் ஈடுபடுபவர்களும், காடையர்களும் ஒன்று கூடினர்.

சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டவர்களை மிகக்கொடூரமாகத் தாக்கினர். அந்த நேரத்தில் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி சத்தியாகிரகிகளை காப்பாற்ற முனைந்தார். அவ்வேளை, மழை தூறிக்கொண்டிருந்தது. அருகில் நின்ற பிரதமர், தூறலில் அவர்கள் நனையட்டும் எனக் கூறி பொலிஸ் அதிகாரி செய்ய முனைந்த கடமையை தடுத்துவிட்டார். காலி முகத்திடலில் மட்டுமல்ல வெளியிடங்களிலும் தமிழர்களின் இரத்தம் வழிந்தோடியது, வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த மற்றைய மாகாணங்களில் வாழ்ந்த தமி

மட்டக்களப்பிலிருந்துவந்த புகையிரதங்களில் தமிழ்ப்பிரயாணிகள் தாக்கப்பட்டனர். அவர்கள் இரத்தத்தில் உறைந்தார்கள். அவர்கள் செய்தபாவம்தான்என்ன? அவர்கள் இலங்கையில் தமிழர்களா கப் பிறந்ததுதானே. தமது தாய் மொழி தமிழ்மொழிக்கு உரிமை கேட்டது தான். தாக்கியவர்களுக்கெதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

தனிச்சிங்களச் சட்டம் 1956ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அன்றைய காலகட்டத்தில் தமிழரசுக்கட்சியானது பல்வேறு சத்தியாக்கிரகப்போராட்டம், உண்ணாவிரதப் போராட்டங்களையும் ஆரம்பிக்கப்போவதாக அறிவித்தது. அதன் பிரகாரம் இந்தப் பிரச்சினையை பேசி தீர்த்துக் கொள்ளலாம் வாருங்கள் என்றார் அன்றைய பிரதமரான பண்டாரநாயக்கா.

### இன்றைய நிகழ்வை அன்று சொன்ன தந்தை செல்வா

இந்த இரு தலைவர்களின் சந்திப்பையும் அவர்களின் பேச்சையும் டெயிலி நியுஸ் பத்திரிகை பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது:-

காரின் கதவடியில் வந்த பிரதமர் பண்டாரநாயக்கவின் கைகளைப் பிடித்து “பல முறை நிதானமாக சிந்தனை செய்துதான் உங்களைச் சந்திக்க நான் ஒத்துக்கொண்டேன். இந்த இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நீங்கள் ஏதேனும் ஒன்றைச் செய்தே ஆக வேண்டும். இன்றைய சூழலில் நாங்கள் ஒன்றித்து இப்பிரச்சினையைத் தீர்க்காவிட்டால் நாம் இறந்த பின்பு நாட்டிற்கு இப்பிரச்சினை பெரும் பேராபத்தை உண்டாக்கும்” - என்று அன்றைய நாள் தந்தை செல்வநாயகம் அவர்கள் தெரிவித்திருந்தமை இன்று நிஜத்தில் நடந்தேறிவிட்டது. தந்தை செல்வாவின் தீர்க்கதரிசனமும், பேராபத்தை நாடு சந்திக்கும் என்ற அவரின் பயமும் இன்னும் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன.

### பண்டா - செல்வா ஒப்பந்தத்தின் சாரம்

ஒப்பந்தம் என்பது பலரின் தலையெழுத்துக்களையும் நாட்டின் சூழலையும் மாற்றிவிடும். பண்டா - செல்வா ஒப்பந்தம் தமிழ்மக்களுக்கான சிறந்ததொரு தீர்வை முன்வைத்திருந்தது. இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இலங்கை வாழ் தமிழ் மக்களின் தாயகம் என்பது அங்கீகரிக்கப்பட்டமையுடன் வடக்கு மாகாணம் ஒரு பிராந்தியமாகவும், கிழக்கு மாகாணத்தில் நாட்டின் இன்னொரு சிறுபான்மை இனமாகிய முஸ்லிம் மக்களையும் அவர்களின் தனித்துவத்தையும் மதிக்கும் நோக்கிலும் கிழக்கு மாகாணம் இரண்டு அல்லது அதற்கு மேலான பிரதேசங்களாகவும் வகுக்கப்பட்டது. இதன் பலனாக முஸ்லிம் மக்களும் தமிழர் தாயகத்தின் தனித்துவமான இனம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் அவர்களும் பிராந்தியத்திற்குரியவர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டனர்.

இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வை ஏற்படுத்தியது அவ்வொப்பந்தம்.

### ஒப்பந்தத்தில் உள்ளடங்கிய அம்சம்

> “தந்தை செல்வா என்ற பெரும் தலைவர் பிறக்காமல் இருந்திருந்தால் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகம் என்று பேசக்கூடிய நிலைகூட உருவாகி இருக்காது. குறிப்பாக கிழக்கு தமிழர்களுக்கு முகவரி கொடுத்த பெருமை தந்தை செல்வா அவர்களையே சாரும்.”

காரங்களாக விவசாயம், கூட்டுறவு, காணி, காணி அபிவிருத்தி, குடியேற்றம், சுகாதாரம், கைத்தொழில், கல்வி, மீன்பிடி, வீடமைப்பு சமூக சேவைகளும் வீடமைப்பும் என்பனவற்றோடு தமிழ் ஒரு தேசிய சிறுபான்மை மொழியாகவும் அங்கீகரிக்கப்பட்டது. வடக்கு - கிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழி சிங்கள மொழிக்கு குந்தகம் இல்லாமல் தமிழிலும் நடைபெறும் என திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டிருந்தது. அதேபோல, குடியேற்றங்களும் கல்லோயா அபிவிருத்தித்திட்டமும் அதில் உள்ளடங்கியிருந்தன.

# இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்**

தந்தை செல்வாவின் இன்னொரு தீர்க்க தரிசனத்தையும் எடுத்துக்காட்ட முடியும். தமிழ் மக்களை இனி கடவுள்தான் காப்பாற்றவேண்டும். இன்றைய நிகழ்வுகளை உற்று நோக்கின் இந்த வார்த்தைக்குள் பொதிந்து கிடக்கின்ற உண்மைகளை உணர்ந்து கொள்ள முடியும்.

1976, மே, 14,ம் நாள் வட்டுக்கோட்டையில் தந்தை செல்வா தலைமையில் எடுத்த தமிழீழ தனியரசுக் கொள்கை தீர்மானம் வடக்கு கிழக்கு மக்களின் அங்கீகார தேர்தலாக 1977 ஜீன் 24 அன்று அமைந்தது. அதில் மட்டக்களப்பு கல்குடா தொகுதியைத் தவிர்ந்த வடக்கு கிழக்கில் உள்ள அனைத்து தமிழ் தொகுதிகளிலும் தமிழீழத்துக்கான அங்கீகாரம்கிடைத்தது.

இதில் வேத்தனை என்னவெனில் வட்டுக்கோட்டை தீர்மானத்திற்கு வடக்கு கிழக்கு மக்கள் வழங்கிய ஆணையை தந்தை செல்வா பார்பதற்கு முன்னமே சரியாக இரண்டு மாதங்களுக்கு முன் 1977 ஏப்ரல் 26 இல் எம்மை விட்டு பிரிந்தார். அவரின் பிரிந்த போதும் அவரின் கொள்கை இன்றும் எம்மத்தியில் உள்ளது என்பதை எவரும் மறுக்கமுடியாது.

ஈழவிடுதலை ஆயுதப்போராட்டம் இடம்பெற்று முள்ளிவாய்க்காலோடு தமிழ் மக்களின் பேரம் பேசும் சக்தி உடைக்கப்பட்டாலும் , தமிழ் மக்களுக்கான தலைமையாக தமிழ் தேசிய கூட்டமைப்பு இன்று செயல் பட்டுவருகிறது.

தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு வரலாறு காணாத வெற்றிகளை பல தேர்தல்களில் தமிழ் மக்கள் வழங்கினர். ஆனால், வடக்கு, கிழக்கு மக்களுக்கான அரசியல் தீர்வு இன்று வரை கிட்டவில்லை என்பது உண்மை.

இந்நிலையில் தந்தை செல்வா இறைபதம் அடைந்து 43 ஆண்டுகள் கடந்த நிலையில் இன்று 2020 ஆம் ஆண்டில் தமிழ் மக்கள் வடக்கு, கிழக்கில் எந்த ஓர் அரசியல் உரிமையும், சுதந்திர வாழ்வு இல்லாமல் இனவாத அரசின் ஆட்சியில்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றர்கள்.

சர்வதேச ரீதியில் எமது ஈழத்தமிழர்களின் விடுதலை அரசியல் கூர்மை பெற்றாலும் இலங்கை அரசியல் தலைவர்கள் தொடர்ந்தும் வடக்கு கிழக்கு தமிழ்மக்களை அடிமைகளாக வைத்துள்ளமையையே காண முடிகிறது.

இருந்தபொதும் தந்தை செல்வா அவர்களால் அத்திவாரம் இடப்பட்ட தமிழ்தேசியம் என்ற உன்னத செயல்பாடு இன்றும் உயிருடன் உள்ளது. தந்தை செல்வா மறைந்து இந்த 43 ஆண்டுகளும் அது உணர்வுடன் செயல்படுகிறது என்பது மட்டுமே உண்மை.

தியாகிகள் சாகலாம் ; தியாகம் சாகாது என்ற வசனத்திற்கு அமைவாக தந்தை செல்வா விட்ட பணியை தொடர்வதே அவருக்கு நாம் செலுத்தும் நினைவாகும்.






# கொரோனா ஆராய்ச்சியில் விடை கிடைக்காத சில மர்மங்கள்!

பெருநோய்ப் பரவலின் வேகத்துக்கு ஈடாக, அதற்கான சிகிச்சை மற்றும் தடுப்பு மருந்து கண்டுபிடிப்பு முயற்சிகளும் மனித குல வரலாறு காணாத வேகத்தில் நடந்துகொண்டிருக்கின்றன.

கொரோனா பாதிப்பினால் உலகம் முழுவதும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஒன்றரை லட்சத்தைத் தாண்டிவிட்டது. போர்ச் சூழலைத் தவிர்த்து, ஒரு சில மாதங்களில் உலகம் முழுவதும் இத்தனை பேர் உயிரிழப்பது நவீன மனிதக் குல வரலாற்றில் இதுவே முதல்முறை.

உயிரிழப்பின் தாக்கத்துக்கு ஈடாக இந்தப் பெருநோய்த் தொற்றினால் ஏற்படப்போகும் பொருளாதாரப் பாதிப்பும் மனிதகுலம் இதுநாள் வரையிலும் அறியப்படாத ஒன்றாகவே இருக்கும்.

இன்றைய நிலைவரப்படி ஐரோப்பிய ஒன்றியத்தின் பொருளாதாரம், இரண்டாம் உலகப்போர் முடிந்த 1945 ஆம் ஆண்டின் நிலைக்கு இறங்கிவிட்டது. அமெரிக்காவின் நிலையும் இதுதான். அமெரிக்க ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரச் சரிவு கொரோனா பாதிப்பு அதிகம் இல்லாத நாடுகளின் பொருளாதார நிலையையும் கடுமையாகப் பாதிக்கும்.

பெருநோய்ப் பரவலின் வேகத்துக்கு ஈடாக, அதற்கான சிகிச்சை மற்றும் தடுப்பு மருந்து கண்டுபிடிப்பு முயற்சிகளும் மனிதகுல வரலாறு காணாத வேகத்தில் நடந்துகொண்டிருக்கின்றன.

நோய்க்கிருமியின் தன்மை, அது மனித உடலில் ஏற்படுத்தும் பாதிப்பு, அந்தப் பாதிப்புக்கு உடலின் நோய் எதிர்ப்பு மண்டலத்தின் எதிர்வினை ஆகியவற்றைத் தெளிவாக அறிந்துகொண்டால்தான் முறையான சிகிச்சை முறை மற்றும் தடுப்பு மருந்து சாத்தியப்படும். அந்த வகையில் கொரோனா வைரஸ் பற்றி இதுவரை மருத்துவ உலகம் அறிந்தது அறியாதது மற்றும் சோதனைகளின் இன்றைய நிலைவரம் ஆகியவற்றைப் பார்ப்போம்.

கொரோனா வைரஸின் அமைப்பு, அதன் மரபணு பற்றிய தகவல்கள் மற்றும் அது உடலின் உயிரணுவுக்குள் எப்படி நுழைகிறது என்பது பற்றிய ஆராய்ச்சிகளெல்லாம் முடிந்துவிட்டன. அதேபோல, கொரோனாவின் தொடக்கம், அது பரவும் முறை, அதன் அறிகுறிகள் மற்றும் மனிதனின் நோய் எதிர்ப்பு மண்டலத்தின் எதிர்வினை பற்றிய தகவல்களும் கண்டறியப்பட்டுவிட்டன.

ஒரு கிருமியின் பரவல் மற்றும் செயல்பாடுகள் பற்றிய இத்தனை தகவல்களை நான்கே மாதங்களில் கண்டறிந்தது உலகில் இதுவே முதல் முறை.






எய்ட்ஸ் நோய் கிருமியான ஹெச்ஐவி கண்டறியப்பட்டபோது இதே ஆராய்ச்சிக்குப் பல ஆண்டுகள் தேவைப்பட்டன. கொரோனா ஆய்வில் பல்வேறு நாடுகளின் ஒத்துழைப்பு மற்றும் ஆராய்ச்சிகளின் ஒருங்கிணைப்பால்தான் இது நான்கே மாதங்களில் சாத்தியமானது.

ஆனாலும் விஞ்ஞானிகளால் இன்னும் தெளிவுபடுத்தப்படாத சில மர்மங்களையும் சுமந்துகொண்டே சுற்றுகிறது கொரோனா.

கொரோனா தொற்றின் தீவிரத்துக்கு ஆளானவர்களிலும் இறந்தவர் எண்ணிக்கையிலும் பெண்களைவிட ஆண்களே அதிகம். மேலும் விதிவிலக்கான ஒரு சில உதாரணங்களைத் தவிர, குழந்தைகள் தீவிரமாகப் பாதிக்கப்படவில்லை. இதற்கான திட்டவட்டமான காரணங்கள் இன்னும் கண்டறியப்படவில்லை. அதேபோல யாருக்கு தொற்றுத் தீவிரமாகும், யாருக்கு ஆகாது என மருத்துவர்களால் அறுதியிட்டுக் கூற இயலவில்லை.

கொரோனா தொற்றிலிருந்து குணமானவர்களுக்கு மீண்டும் தொற்றுமா அல்லது அம்மை நோயைப் போல நிரந்தர நோய் எதிர்ப்பு அமையுமா என்ற கேள்விக்கும் திட்டவட்டமான பதில் தெரியவில்லை.

கொரோனா தாக்கம் முற்றிய நிலையில் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுபவர்களுக்குப் பல்வேறு நாடுகளில் ஹைட்ராக்ஸி குளோரோகுயின் எனும் மலேரியா சிகிச்சைக்கான மருந்து பரிந்துரைக்கப்படுவது நாம் முன்மே அறிந்ததுதான். நோய்ப் பரவலின் தாக்கம் அதிகமாக இருக்கும் இத்தாலி, பிரான்ஸ் போன்ற ஐரோப்பிய நாடுகளின் மருத்துவமனைகளில் வேறு சில மருந்துகளும் பரிசோதனை முயற்சியாக உபயோகிக்கப்படுகின்றன. இவற்றில் எய்ட்ஸ் மற்றும் எபோலா நோய் சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் மருந்துகளும் அடக்கம். பல்வேறு நாடுகளைச் சேர்ந்த எழுபதாயிரத்துக்கும் மேற்பட்ட நோயாளிகள் உலக அளவில் ஒருங்கிணைக்கப்பட்ட இந்தப் பரிசோதனை முயற்சிகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இரண்டாம் தலைமுறை கொரோனா எனக் குறிப்பிடப்படும் கோவிட் 19 கிருமிக்கு எதிரான பிரதியேக மருந்து மற்றும் தடுப்பூசி கண்டுபிடிப்புக்காக உலகம் முழுவதும் 860 முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. மிகக் குறைந்த கால அவகாசத்தில் இத்தனை முயற்சிகள் முன்னெடுக்கப்படுவது இதுவே முதல் முறை !


இரண்டாம் தலைமுறை கொரோனா எனக் குறிப்பிடப்படும் கோவிட் 19 கிருமிக்கு எதிரான பிரதியேக மருந்து மற்றும் தடுப்பூசி கண்டுபிடிப்புக்காக உலகம் முழுவதும் 860 முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. மிகக் குறைந்த கால அவகாசத்தில் இத்தனை முயற்சிகள் முன்னெடுக்கப்படுவது இதுவே முதல் முறை !

மேற்சொன்ன முயற்சிகளின் மூலம் 150 தடுப்பூசி வாய்ப்புகள் கண்டறியப்பட்டு, அவற்றில் இருபது மருந்துகள் முடிவடையும் நிலையிலும், ஐந்து தடுப்பு மருந்துகள் சோதனைக் கட்டத்திலும் இருக்கின்றன.

இவ்வளவு ஆராய்ச்சிகள் நடந்தும் ஏன் ஒரு தீர்மானமான பதில் கிடைக்கவில்லை என்ற கேள்வி எழலாம். இதற்கான பதில் கொரோனா பரவும் வேகத்திலும் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையிலும் இருக்கிறது. உலகம் முழுவதும் பல லட்சம் பேர் பாதிக்கப்பட்டு நாள் ஒன்றுக்கு ஆயிரக்கணக்கானோர் உயிரிழக்கும் ஒரு பெருநோய்ப் பரவலுக்கான மருந்தின் நம்பகத்தன்மை எந்த ஆட்சேபனைகளுக்கும் இடமின்றி நிரூபிக்கப்படவேண்டியது மிக அத்தியாவசியமான ஒன்று.

அவசர நிலையைக் காரணம் காட்டி முறையான பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படாமல் ஆரம்பிக்கப்படும் சிகிச்சை முறையில் தவறுகள் ஏற்படுமானால் அது உலகம் முழுவதும் ஏற்படுத்தும் பாதிப்பு, கொரோனா பரவலை விடவும் பெரிதாகிவிடக்கூடிய அபாயம் இருக்கிறது.

பொதுவாக ஒரு நோய்க்கிருமிக்கான சரியான தடுப்பு மருந்தைக் கண்டறிய எட்டாண்டுகள் வரை தேவைப்படும். 1983ஆம் ஆண்டு அறியப்பட்ட எய்ட்ஸ் நோய்க்கான தடுப்பு மருந்து இதுநாள் வரையிலும் கண்டுபிடிக்கப்படவில்லை.

போர்க்கால அவசரத்தையும் தாண்டிய வேகத்தில் மேற்கொள்ளப்படும் தடுப்பு முயற்சிகளின் விளைவாகக் கொரோனாவுக்கு எதிரான பயனுள்ள தடுப்பு மருந்து உடனடியாகக் கண்டுபிடிக்கப்பட்டாலும், அது பல்வேறு சோதனைகளைத் தாண்டி உலக நாடுகள் அனைத்தின் தேவையையும் பூர்த்திச் செய்யும் எண்ணிக்கையில் தயாரிக்கப்பட மிகக் குறைந்தபட்சம் ஒரு வருடம் தேவைப்படும் என்கின்றனர் மருத்துவ நிபுணர்கள்.



– காரை அக்பர் –
நன்றி:– விகடன்

# அவசர தேவைகளுக்கு மட்டும் வீட்டுக்கு ஓரிருவர் சுகாதார வழிமுறைகளைப் பேணிப் பயணிப்போம்

## யாழ் ஆயர் மக்களுக்குச் செய்தி

ஒரு மாதகால ஊரடங்கு யாழ்ப்பாணத்தில் தளர்த்தப்பட்ட நிலையில் தொடர்ந்தும் கவனமாக இருக்கும்படி யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின பேணாட் ஞானப் பிரகாசம் ஆண்டகை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மையில் ஆயர் வெளியியிட்ட ஓர் ஊடக அறிக்கையிலேயே இவ்வேண்டுகோளை அவர் விடுத்துள்ளார்.

அவரின் ஊடக வெளியீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கடந்த ஒரு மாத காலமாக வீட்டோடு வாழ்ந்து எமது சமூக சூழமைவில் கொரோனா வைரஸ் தாக்கத்தை நாம் ஓரளவு கட்டுப்பாட்டிற்குள் கொணர்ந்துள்ளோம். பெரிதும் பாதிப்புக்குள்ளான மாவட்டங்களில் யாழ் மாவட்டமும் ஒன்றாகும். இறைவனின் இரக்கத்தால் நாம் இதுவரை பெரிதும் பாதிக்கப்படவில்லை. அதற்கான காரணம் மக்களாகிய நீங்கள் அரசின் அறிவுறுத்தலுக்கு அமைவாக கீழ்ப்படிந்து வாழ்ந்ததமையே ஆகும்.

இன்று யாழ் மாவட்டத்தில் அரசு மீண்டும் ஊரடங்கைத் தளர்த்தியுள்ள நிலையில் மக்கள் கூடுதலான எண்ணிக்கையில் செறிவாக கூடிவருவதை அவதானிக்க முடிகிறது. அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், மாவட்டச் செயலகம், யாழ் கட்டளைத் தளபதி ஆகிய தரப்புகள் யாழ் மாவட்டத்தில் ஊரடங்கை அவசரமாகத் தளர்த்த வேண்டாம் எனக் கோரிய போதிலும் அரசு இம்முடிவை எடுத்துள்ளது.

ஆகவே கொவிட் - 19 இன் அச்சுறுத்தல் இன்னும் யாழ் மாவட்டத்தில் உண்டு என்பதே உண்மை நிலையாகும்.



எனவே ஊரடங்கு இல்லை என்ற எண்ணம் யாழ்மக்களாகிய எமக்கு வேண்டாம். எதிர்வரும் இரு வாரங்களுக்காவது தொடர்ந்து விழிப்பாக இருப்போம். மத வழிபாடுகள், பொது ஒன்றுகூடல்கள், வீண் களியாட்டங்கள், விளையாட்டுப் போட்டிகள் என்பவற்றை இக்காலத்தில் தவிர்த்துக்கொள்வோம். அவசர தேவைகளில் கூட பத்துப் பேருக்கு மேலாக ஒன்று கூடுவதைத் தவிர்த்துக் கொள்வோம்.

அவசர தேவைகளுக்கு மட்டும் வீட்டில் உள்ள ஒருவரோ அல்லது இருவரோ வெளியில் சுகாதார வழிமுறைகளைப் பேணிப் பயணிப்போம். முகக்கவசம் அணிவோம். சமூக இடைவெளிகளைக் கடைப்பிடிப்போம்.

நாம் சுய கட்டுப்பாட்டுடன் வாழ்வதன் வழியாக சமூக நலனைப் பேணுகின்றோம் என்ற உணர்வை இக்காலத்தில் மேம்படுத்துவோம். இறைவன் நம் மக்களையும், நகரையும், முழு உலகையும் இக்கொடிய நோயின் தாக்கத்தில் இருந்து பேணிக் காப்பாராக. - என்று உள்ளது.

## இரு முக்கிய நிகழ்வுகளை தள்ளி வைத்தது திருஅவை

2021 ஆம் ஆண்டு ஜூன் மாதம் உரோம் நகரில் நடைபெற விருந்த குடும்பங்களின் உலக மாநாடு 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதமும், 2022 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் லிஸ்பன் நகரில் நடைபெறவிருந்த இளைஞர்கள் உலக நாள் 2023 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதமும் நடைபெறும் என திருப்பீடத் தகவல் தொடர்பக இயக்குனர் மத்தேயோ புரூனி அவர்கள் அறிவித்தார்.

வருகிற ஆண்டுகளில் நடைபெறவிருந்த திருஅவையின் இந்த இரு முக்கிய உலகளாவிய நிகழ்வுகளும் கொரோனா தொற்றுக்கிருமி பரவல் காரணமாகத் தள்ளி வைக்கப்பட்டுள்ளன என்று 20 ஏப்ரல் 2020 அன்று திருப்பீடம் அறிவித்தது.

காலைக்கதிர் Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்

## ஊரடங்கால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கியூடெக் கரித்தாஸ் இயக்குநர் உதவி

யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தின் கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் இயக்குநர் எஸ்.இயுஜீன் பிரான்ஸிஸ் அடிகளார் தெல்லிப்பளை, ஊர்காவற்துறை, யாழ்ப்பாணம் போன்ற பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட 265 குடும்பங்களுக்கு உதவிகளை வழங்கினார். இந்த உதவிக்கான நிதியை தமது பெயரைக் குறிப்பிட விரும்பாத கனடா, பிரான்ஸ், லண்டன் ஆகிய இடங்களைச் சேர்ந்த எஸ்.இயுஜீன் பிரான்ஸிஸ் அடிகளாரின் நண்பர்கள் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.





## பாகிஸ்தானில் முதல்முறையாக நேரடி ஒளிபரப்பில் திருப்பலி

பாகிஸ்தான் ராவல்பிண்டியின் புனித யோசேப்பு பேராலயத்தில் உயிர்ப்புப் பெருவிழாவன்று நிறைவேற்றப்பட்ட திருப்பலி தேசிய தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பானது. பல்சமய அமைதி மற்றும் ஒத்துணர்வு சங்கத்தின் தலைவர், பாகிஸ்தான் தேசிய தொலைக்காட்சி மேற்கொண்ட இந்த நேரடி ஒளிபரப்பு சிறுபான்மையினரும் அந்நாட்டில் சம உரிமைகள் கொண்ட குடிமக்கள் என்பதை உணர்த்தியுள்ளது என்றும் இது உண்மையிலேயே நேர்மறையான முன்னேற்றம் என்றும் கூறியுள்ளார். இஸ்லாமியரைப் பெரும்பான்மையாகக் கொண்டுள்ள பாகிஸ் தான் வரலாற்றில், முதல்முறையாக கத்தோலிக்கர்களின் திருப்பலி நேரடி ஒளிபரப்பில் இடம்பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## கொரோனா ஊரடங்கால் வருமானத்தை இழந்த 400 குடும்பங்களுக்கு சம்பல் அமைப்பு நிவாரணம்


'ஒரு மனதிற்கு உதவி ஒரு வாழ்வைக் கட்டி எழுப்ப' என்ற நோக்குடன் செயற்படும் சம்பல் (sambal) என்ற அமைப்பும் மாறி மற்றும் லோகன் சவரிமுத்து என்பவர்களால் இயக்கப்படும் சவரிமுத்து குடும்ப நிறுவனமும் இணைந்து கொரொனா வைரஸ் தாக்கத்தால் அன்றாட வருமானத்தை இழந்த 400 குடும்பத்தவர்க்கு உலர் உணவு வழங்கியுள்ளன. யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த வேலணை, அச்சுவேலி, வசாவிளான், குருநகர் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கனகபுரம், அம்பிகைக்குளம், உதயநகர் பெரியபரந்தன், விநாயகபுரம், செல்வநகர், திருநகர் ஆகிய இடங்களிலும், வேலணையைச் சேர்ந்த துறையூர், அம்பிகாநகர் ஆகிய இடங்களிலும் வாழும் 400 குடும்பங்களே மேற்படி உலர்உணவுவைப் பெற்றுக்கொண்டன. இவர்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வேலணையைச் சேர்ந்த உள்ளூர் பிரதிநிதிகள் மற்றும் கிராமசேவகர்கள் ஊடாக இனம்காணப்பட்டனர். இவ்விடங்களில் இருந்து கிடைக்கப் பெற்ற



மேலதிக வேண்டுகோள்களைப் பரிசீலனை செய்யும் இந்த அமைப் பினர் வருகின்ற வாரங்களில் இன்னும் அதிக குடும்பத்தினர்க்கு உதவிகளை வழங்க வுள்ளனர்.

தேவையில் இருக்கும் மக்களுக்கு உதவ மேற்படி மாவட்டங்களில் தமது நேரத்தை அர்ப்பணித்த அனைவருக்கும் சவரிமுத்து குடும்பத்தினர் தமது நன்றியைத் தெரிவித்துள்ளனர்.






படம் 1



படம் 2

# தினம் ஒரு தலைப்பு
# சித்திரப்போட்டி

மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்



படம் 3

படம் 1
**அ. க. ரிஷாளன் - தரம் 11**
யா/ பரியோவான் கல்லூரி

படம் 2
**டேவிட்ராஜ் பிலெஸ்ஷின் - தரம் 5**
யா/ வட இந்து ஆரம்பப் பாடசாலை

படம் 3
**பா. தனுஷன் - தரம் 4**
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

பா. தனுபன் – தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

பா. ஹரிஷ் – தரம் 4
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

பா. பிரியேஷ் – தரம் 1
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

உ. ரோஷித் –தரம் 4
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

இ. கார்த்திகன் – தரம் 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

ரங்கதாஸ் பவினேஷ் –தரம் 1
யா/ மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பளை

டி. ஹரிஸ்மன் –தரம் 8
யா/ புனித பத்திரிசியர் கல்லூரி

எஸ். சிவசாகித்தியன் – தரம் 7
யா/ மகாஜனாக் கல்லூரி

ச. அபினாஷ் – தரம் 9
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

டி. அபிலாஷ் – தரம் 10
யா/ புனித பத்திரிசியர் கல்லூரி

கு. ஆதிகேசவன் – தரம் 10
யா/ ஹாட்லிக் கல்லூரி

மயூரன் தேனுக – தரம் 10
யா/ வேலணை மத்திய கல்லூரி

அறிவுச்செல்வன் அறிவுஆதித்தன் – தரம் 9
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

தி. கோவெழிலன் – தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

லோ. நித்திலா – தரம் 4
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை

எவ். ஸூமையா – தரம் 9
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

லீனா பர்ஹான்
கிட்ஸ்வே ஆரம்பப் பாடசாலை, கல்கமுவ

மயூரன் யதுசன் – தரம் 6
யா/ வேலணை சரஸ்வதி வித்தியாலயம்

## இந்த மூன்று சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இன்றையசித்திரப் போட்டிக்கான தலைப்பு - மரதன் ஓட்டம்

**நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் 'யானைக் கூட்டம்' எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர்.**

**தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிக மாகத் தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களை வரைந்தவர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.**

சி. சிவகலை – தரம் 4
யா/ இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்

வி. சொலோமி – தரம் 6
யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

செந்தூரன் அபிஷ்கன் – தரம் 4
யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம், கரவெட்டி

அறிவுச்செல்வன் அறிவுஅரங்கன் – தரம் 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

ஜி. ரோண் பிராங்கிலின் லியோன் – தரம் 9
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தி யாலயம்

த. ஆரூசன் – தரம் 2
யா/வதிரி வடக்கு மெமி. அ. த. க. பாடசாலை

எம். எவ். எவ். ஹூமைரா – தரம் 10
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

எவ். நஸ்மியா – தரம் 10
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

ஆதிரை அகிலன் – தரம் 3
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

ஆயிழை அகிலன் – தரம் 3
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

எம். சி. ஜோசுவா சொலொமன் – தரம் 4
யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

சி. சுகிர்மன் – தரம் 6
கொக்குவில் இந்துக் கல்லூரி

ஐ. ஆரணி – தரம் 4
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

காலைக்கதிர் Kalaikathir

## மரதன் ஓட்டம்

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு



## தினம் ஒரு தலைப்பு
## சித்திரப்போட்டி

**இன்று (26/04/2020) தலைப்பு**
**மரதன் ஓட்டம்**

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலை யில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோ ரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முக வரிக்கு அனுப்பிவைக்கவும்.

**மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623**

# பரிசோதனை கூடத்திலிருந்து கொரோனா வைரஸ் பரவியது என்பது உண்மையா?



சீனாவில் வுஹானில் உள்ள ஒரு வைரஸ் ஆய்வு நிலையத்தின் உயிரி பாதுகாப்புத் தன்மை குறித்து அமெரிக்காவின் ரகசியத் தகவல் பரிமாற்ற ஆவணங்களில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் பரவி உலகின் கவனத்தை ஈர்த்த அதே வுஹானில்தான் இந்த ஆய்வகம் அமைந்துள்ளது.

வுஹான் பரிசோதனை நிலையத்திலிருந்துதான் இந்த வைரஸ் வெளியாகியுள்ளது என்ற உறுதிப் படுத்தப்படாத தகவல்களை அமெரிக்கா ஆய்வு செய்து வருகிறது என்று அதன் அதிபர் டொனால்ட் டிரம்ப் கூறியுள்ளார்.

அப்படி ஏதும் இருந்தால் என்ன, இப்போதைய நோய்த் தொற்று பற்றி நாம் புரிந்து கொள்ள இதில் ஏதாவது இருக்கிறதா? இரகசியத் தகவல்கள் என்ன சொல்கின்றன?

தூதரக அளவில் இருந்து பெறப்பட்ட ரகசியத் தகவல்கள் குறித்து வொஷிங்டன் போஸ்ட்பத்திரிகைசெய்திவெளியிட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டில் அமெரிக்க விஞ் ஞானிகளிகள் சீனாவின் ஆராய்ச்சி மை யத்தைப் பார்வையிட திரும்பத் திரும்ப அனுப்பப்பட்டதாக அந்தத் தகவல்கள் தெரி விக்கின்றன. அந்த ஆய்வகத்தில் பாதுகாப்பு அம்சங்கள் போதுமான அளவுக்கு இல்லை என்று வொஷிங்டனுக்கு இரண்டு எச்சரிக் கைகளை அதிகாரிகள் அனுப்பியுள்ளனர்.



வுஹான் நச்சுயிரியல் மையத்தின் பாது காப்பு மற்றும் நிர்வாகத்தில் உள்ள பலவீனங் கள் குறித்து அதிகாரிகள் தீவிர கவலை தெரிவித்த மையுடன், கூடுதல் ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர் என அந்தச் செய்தி யில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

வவ்வால் கொரோனா வைரஸ் குறித்த ஆய்வக ஆராய்ச்சி சார்ஸ் போன்ற புதிய நோய்த் தொற்று அபாயத்தை ஏற்படுத்தும் என்று தூதரக விஞ்ஞானி கள் கவலை தெரிவித்திருந்தனர். இப்போதைய நோய்த்தொற்றுக்கு வுஹான் நச்சுயிரியல் மையமோ அல்லது வுஹானில் உள்ள வேறொரு ஆய்வ கமோ காரணமாக இருக்குமா என்பது குறித்து அமெரிக்க அரசு சமீபத்தில் நடத்திய ஆய்வில், இந்த ரகசியத் தகவல்கள் முக்கிய இடம் பெற்றன எனவும் அந்தப் பத்திரிகை கூறியுள்ளது.

மேலும், ஆய்வகத்திலிருந்து வைரஸ் பரவியிருக்கும் என்ற வாதத்தை முன்வைத்து ய்லிமு ஹிளழவி செய்தியும் வெளியானது.

வுஹான் ஆய்வகத்திலிருந்து கொரோனா வைரஸ் உருவானது என்ற தகவல் குறித்து அமெ ரிக்கா ஆய்வு செய்து வருவதாக டிரம்ப் கூறியுள்ளார்.

வுஹானில் உணவு அங்காடியில் தொடர்பு டையதாக இந்த வைரஸ் பாதிப்பு பற்றிய தகவல் வெளியானது. ஆனால், இணையதளங்களில் தீவிரமாக அனுமானங்கள் குறித்த செய்திகள் வந்தாலும், பரிசோதனை நிலையத்திலிருந்து (கோவிட் – 19 நோய் தாக்குதலை உருவாக்கும்) சார்ஸ் – சி.ஓ.வி. – 2 வைரஸ் தற்செயலாக வெளியாகி யிருக்கும் என்ற வாதத்திற்கு ஆதாரம் எதுவும் இல்லை.


## ஆய்வகங்களில் எந்த மாதிரியான பாதுகாப்பு அம்சங்கள் பயன்படுத்தப் படுகின்றன?

வைரஸ்கள் மற்றும் பாக்டீரியாக்கள் குறித்து ஆராயும் பரிசோதனை நிலையங்கள் பி.எஸ்.எல். தரநிலைகள் என்ற நடைமுறையைப் பின்பற்று கின்றன. பி.எஸ்.எல். என்பது உயிரி பாதுகாப்பு நிலையைக் குறிப்பதாகும்.

இதில் 4 நிலைகள் உள்ளன. எந்த மாதிரியான உயிரியல் ஏஜென்ட்கள் பற்றி ஆய்வு நடைபெறுகிறது என்பதைப் பொருத்தும், அவற்றைப் பிரிப்பதில் எந்த மாதிரியான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதைப் பொருத்தும் இது மாறுபடும்.

உயிரிப் பாதுகாப்பு நிலை 1 என்பது தான் குறைந் தபட்ச அளவு. மனிதர்களுக்கு ஆபத்து ஏற்படுத்தாக நன்கு அறியப்பட்ட உயிரியல் ஏஜென்ட்களை ஆய்வு செய்யும் ஆய்வகங்களில் பின்பற்றப்படுகிறது.

அடுத்தடுத்த நிலைகளில், வைரஸ்களைக் கட்டுப்படுத்துவதற்கான முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் தீவிரமடையும்.



உயிரி பாதுகாப்பு நிலை 4 இல் அதிகபட்ச முன் னெச்சரிக்கை ஏற்பாடுகள் இடம் பெற்றிருக் கும். குறைந்த அளவே தடுப்பு மருந்துகள் அல்லது சிகிச்சைகள் உள்ள மிகவும் அபாயகர மானநோய்க்கிருமிகளைக்கையாளும்ஆய்வகங்களில் 4 ஆவது நிலைக்கான நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். எபோலா, மார்பர்க் வைரஸ் போன்றவை இந்த வகையில் வரும். அமெரிக்கா மற்றும் ரயாவில் இவை உள்ளன. தட்டம்மை ஆய்வும் இந்த வகைப்பாட் டில் சேரும். சர்வதேச அளவில் பி.எஸ்.எல். தரநிலைகள் பின்பற்றப்படுகின்றன, ஆனால் அதில் சில வேறு பாடுகள் இருக்கும்.

> வுஹான் பரிசோதனை நிலையத்திலிருந்துதான் இந்த வைரஸ் வெளியாகியுள்ளது என்ற உறுதிப் படுத்தப்படாத தகவல் களை அமெரிக்கா ஆய்வு செய்து வருகிறது என்று அதன் அதிபர் டொனால்ட் டிரம்ப் கூறியுள்ளார்.

உதாரணமாக, ரஷ்யாவில் அதிகபட்ச எச்சரிக்கைக் கானது 1வது நிலை என்றும், குறைந்தபட்ச எச்சரிக் கைக்கு உரியது 4வது நிலை என்றும் குறிப்பிடப்படும். ஆனால் நடைமுறைகள் மற்றும் கட்டமைப்பு வசதி கள் எல்லாம் சர்வதேச அளவில் ஒரே மாதிரிதான் பின்பற்றப்படும் என்று லண்டனில் உள்ள கிங்ஸ் கல்லூரியின் உயிரி பாதுகாப்பு நிபுணர் டாக்டர் பிலிப்பா லென்ட்ஜோஸ் கூறுகிறார்.

ஹங்கேரியில் உள்ள இதைப் போன்ற ஆய்வ கங்களில் நான்கு நிலைகளிலுமான தரநிலைகள் பின்பற்றப்படுகின்றன. வெவ்வேறு நோய்க் கிருமிக ளைக் கையாள்வதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பொருத்து இதற்கான நிலைகள் மாறுபடும். உலக சுகாதார நிறுவனம் இந்த வெவ் வேறு நிலை களுக்கான வழிகாட்டிக் கையேடுகளை வெளி யிட்டுள்ளது.அது எந்த ஒப்பந்தத்தின் கீழும் பின்பற்றத்தக்கதாக இல்லை.

ஆய்வகங்களில் வேலை பார்ப்பவர்களின் பாதுகாப்பு கருதியும், தங்களுக்கு அல்லது தங்களைச் சார்ந்தவர்களுக்கு நோய்த் தொற்று பராமல் தடுக் கவும், தற்செயலாக அது வெளியாகி சுற்றுச்சூழலை பாதித்துவிடாமல் இருக் கவும் இந்த விதிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன என்று டாக் டர் லென்ட்ஜோஸ் குறிப்பிடு கிறார்.

ஆனால் இதற்கான ’கண்டிப்பு’ நிறைய நிபந்தனைகளுடன் வருகிறது. சர்வதேச பங்காளர் களுடன் இணைந்து நீங்கள் பரிசோதனைத் திட் டங்களை மேற்கொள்வதாக இருந்தால், குறிப்பிட்ட தர நிலை களில் ஆய்வகங்கள் இருந்தாக வேண்டும். அல்லது சந்தையில் நீங்கள் பொருள் விற்பதாக அல்லது சில சேவைகளை அளிப்பதாக இருந்தால், உதாரணமாக பரிசோதனைகள் செய்வதாக இருந் தால், சர்வதேச தரநிலைகளின்படி செயல்பட்டாக வேண்டும் என்றும் அந்தப் பெண்மணி கூறுகிறார்.

சொல்லப்போனால், வுஹான் நச்சுயிரியல் மையத்துக்கு அமெரிக்காவிடம் இருந்தும், அமெ ரிக்க ஆராய்ச்சி நிலையங்களிடம் இருந்தும் நிதியு தவிகள் அளிக்கப்படுகிறது. அவற்றுக்கு இன்னும் அதிக நிதியுதவி அளிக்க வேண்டும் என்றும்ரகசியத் தகவல் பரிமாற்றத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எந்த மாதிரியான பாதுகாப்புக் குறைபாடுகளை இரகசியத் தகவல்கள் குறிப்பிடுகின்றன?

வொஷிங்டன் போஸ்ட் செய்தியில் இருந்து இதற்கு நமக்கு எதுவும் தெரியவில்லை என்பது தான் குறுகிய பதிலாக இருக்கும். ஆனால், பொதுவாகக் கூறுவதாக இருந்தால், உயிரியல் ஏஜென்ட்களைக் கையாளும் ஆய்வகங்களில்பாதுகாப்புஅம்சங்கள்மீறப்படுவதற்கு பல வாய்ப்புகள் உள்ளன என்று குறிப்பிடலாம்.

ஆய்வகத்துக்குச் செல்ல யாருக்கு அனுமதி உள்ளது, விஞ்ஞானிகள் மற்றும் தொழில்நுணுக்க நிபுணர்களின் பயிற்சி மற்றும் புத்தாக்கப் பயிற்சி, பதிவுகள் பராமரிக்கும் நடைமுறைகள், சூழல் வரைபட வசதி, நோய்க் கிருமிகளின் பட்டியல், விபத்து அறிவிக்கை செய்யும் நடைமுறைகள், அவசர கால நடைமுறைகள் ஆகியவை இதில் அடங்கும் என்று டாக்டர் லென்ட்ஜோஸ் கூறுகிறார்.

(15 ஆம் பக்கம் பார்க்க…)

# யாழ் நகர வீடொன்றில் நேற்றிரவு பொலிஸார் அதிரடிச் சோதனை

## வெளி மாவட்ட யுவதிகள் இருவர் விசாரணையில்

யாழ்ப்பாணம் மாநகரப் பகுதியில் உள்ள வீடொன்றில் கலாசார சீரழிவு இடம்பெற்று வந்ததாகக் கூறப்பட்ட நிலையில் நேற்று இரவு அந்த வீடு பொலிஸாரால் சுற்றிவளைக் கப்பட்டது. வெளிமாவட்டத்தைச் சேர்ந்த பெண்கள் இருவர் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

பின்னர் அங்கிருந்த இரு பெண்களையும் ஆண் ஒருவரையும் அந்த வீட்டிலையே தனிமைப்படுத்த பொலிஸார் மற்றும் பொதுசுகாதார பரிசோதகர்கள் ஆகியோர் நடவடிக்கை எடுத்தனர்.

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் மனோகரா தியேட்டருக்கு அண்மையாக உள்ள வீடொன்றிலேயே அண்மைக் காலமாக கலாசார சீரழிவு இடம்பெற்று வந்ததாக அயலவர்களால் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதாம்.

அந்த வீட்டை நேற்று இரவு 7.45 மணியளவில் சுற்றி வளைத்த பொலிஸார், அங்கிருந்த வெளிமாவட்டத்தைச் சேர்ந்த பெண்கள் இருவரையும் விசாரணைக்கு உட்படுத்தினர். அத்துடன் அங்கு விடுதி நடத்தி வந்தவரையும் பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தினர்.

அவர்கள் விசாரணைகளின் போது தொடர்ந்து முன்னுக்கு பின் முரணான தகவல்களை வழங்கினர் எனக் கூறப்படுகின்றது.

இதனால் நேற்றைய தினம் இருவரையும் அந்த வீட்டிலையே தனிமைப்படுத்தி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இன்று அவர்களை தனிமைப்படுத்தல் முகாமுக்கு அனுப்ப நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# உடல் வெப்பநிலையை சோதிக்கும் பணியில் விசேட இராணுவ அணி





கொழும்பில் அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுவோர் மத்தியில் கொரோனா வைரஸ் விரைவு பரிசோதனைகளை மேற்கொள்ள இராணுவத்தினரின் 20 பேரை கொண்ட குழுவினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கொழும்பில் அபாயம் நிலவும் இடங்களில் பரிசோதனைகளை விரைவுபடுத்தும் முகமாகவே இந்த நடவடிக்கைகளை இராணுவம் முன்னெடுத்துள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதன்படி வீதிகளின் பயணிப்போரின் உடல் வெப்பநிலை கண்காணிக்கப்படுகிறது. உடல் வெப்பநிலையில் மாற்றம் தென்படுமாயின் அவர்களுக்கு மருத்துவ ஆலோசனைகள் தயார்படுத்தப்படுவதாக இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் அத்தியாவசிய சேவைகளில் ஈடுபட்டுள்ளவர்களிடம் படையினர் வந்து வெப்பநிலையை பரீட்சிக்கும்போது அதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு படையினர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்


சசிகா லேணர்ஸ்



முறையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறையில் செலுத்த முடியும்.

எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத் தொழில்நுட்ப வகுப்புகளும் நடைபெறும்.

எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.

எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும். விரைவில் எழுப் பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத் தரப்படும்.

வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியை மேற்கொள்ளலாம்.)

தலைமை காரியாலயம்,
இல.57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
HotLine - 077 722 6847
021 221 7678
077 614 0361
Sasika Learners
Sasika Driving Schoolgmail.com

THE SASIKA LEARNERS

அரச அதிகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

DS NO - 882

கிளை நிறுவனங்கள் –

| | | | |
|---|---|---|---|
| வேலணை<br>வங்களாவடிச் சந்தி, வேலணை<br>021 221 5472<br>070 301 3012 | கே.கே.எஸ்.வீதி, மல்லாகம்.<br>021 224 3393<br>070 301 3014 | சங்கானை<br>ஒடக்கரை வீதி, சங்கானை<br>021 225 1664<br>070 301 3016 | யாழ்ப்பாணம் (Town)<br>இல.281 C, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்<br>(போதனா வைத்தியசாலை பின்புறமாக)<br>021 221 5472<br>07 301 3012 |
| காரைநகர்<br>021 225 2454<br>070 510 2484 | பண்டத்தரிப்பு<br>021 225 2333<br>071 255 4135 | பருத்தித்துறை வீதி, நெல்லியடி<br>021 226 0999<br>071 775 0999 | |

# கொரோனா சிகிச்சைக்கு மருந்து எப்போது கிடைக்கும்?

ஜேம்ஸ் கலாகெர்
சுகாதார மற்றும் அறிவியல் செய்தியாளர்

கொவிட்19 நோய் தாக்குதலுக்கு உலகெங்கும் இதுவரை 190,000க்கும் மேற்பட்டோர் இறந்துவிட்டனர். ஆனால் அதற்கான சிகிச்சை தருவதற்கு, நோயை குணமாக்கும் என்று நிரூபிக்கப்பட்ட மருந்துகள் எதுவும் மருத்துவர்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை.



இந்த உயிர் காக்கும் மருந்துகளைத் தயாரிப்பதில் நாம் இன்னும் எவ்வளவு தொலைவில் இருக்கிறோம்? சிகிச்சை முறைகளைக் கண்டறிய என்ன பணிகள் நடக்கின்றன?

கொரோனா வைரஸ் தொற்றுக்கு சிகிச்சை அளிக்க, உலகம் முழுக்க 150க்கும் மேற்பட்ட மருந்துகள் குறித்து ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. ஏற்கெனவே இருக்கும் சில மருந்துகள், இந்த வைரஸ் நோய் சிகிச்சைக்கு பயன்படுமா என்றும் பல பரிசோதனைகள் நடைபெறுகின்றன.

மிகவும் நம்பிக்கை தரும் சிகிச்சை முறைகளை மதிப்பீடு செய்வதற்காக உலக சுகாதார நிறுவனம் 'சாலிடாரிட்டி' (WHO Solidarity) திட்டத்தின் கீழ் மருத்துவப் பரிசோதனையைத் தொடங்கியுள்ளது.




இந்த நோயைக் குணமாக்குவதற்கு தாங்கள் 'ரெக்கவரி' (Recovery) திட்டத்தின்கீழ் மேற்கொண்டுள்ள பரிசோதனை முறைதான் உலகிலேயே மிகப் பெரியது என்று பிரிட்டன் கூறியுள்ளது. இதில் ஏற்கெனவே 5,000க்கும் மேற்பட்ட நோயாளிகள் பங்கேற்றுள்ளனர்.

நோய் தாக்கி குணம் அடைந்தவர்களின் இரத்தத்தை எடுத்து சிகிச்சைக்குப் பயன்படுத்துவதற்கு ஏராளமான ஆராய்ச்சி மையங்கள் முயற்சி செய்து கொண்டிருக்கின்றன.

## எந்த மாதிரியான மருந்துகள் பயன்தரலாம்?

மூன்று பரந்த அணுகுமுறைகளில் முயற்சிகள் நடைபெறுகின்றன:–

வைரஸ் எதிர்ப்பு மருந்துகள். இவை உடலில் நேரடியாக கொரோனா வைரஸ்களை தாக்கும் திறன் கொண்டவை.

நோய் எதிர்ப்பு மண்டலத்தை ஆற்றுப்படுத்துபவை. நோய் எதிர்ப்பு மண்டலம் தீவிரமாக வேலை செய்யும்போது, உடலுக்கு பெரிய பாதிப்புகளை ஏற்படுத்துகிறது.

குணம் அடைந்தவர்களின் ரத்தத்தில் இருந்து எடுத்த அல்லது ஆய்வகங்களில் உருவாக்கிய நோய் எதிர்ப்பு அணுக்கள் கொரோனா வைரஸை தாக்கக் கூடியவை.

## அதிக நம்பிக்கை தரும் கொரோனா வைரஸ் மருந்து எது?

சீனாவுக்கு தாம் சென்று வந்த பிறகு, remesivir என்ற மருந்துதான் இதற்கு நல்ல பலன் தருவதாக தெரிகிறது என்று உலக சுகாதார நிறுவனத்தை சேர்ந்த மருத்துவர் புரூஸ் அயில்வார்டு தெரிவித்துள்ளார்.

வைரஸ் எதிர்ப்புக்கான இந்த மருந்து இபோலா நோய்க்கு சிகிச்சை தருவதற்காக தயாரிக்கப்பட்டது. ஆனால் வேறு நோய்களின் சிகிச்சைக்கான பயன்பாடுகளும் சிறப்பாக உள்ளன.

விலங்குகளுக்குப்பயன்படுத்திப்பார்த்ததில், மற்ற கொரோனா வைரஸ்களுக்கு எதிரான சிகிச்சைகளில் (சுவாசக் கோளாறுகளை ஏற்படுத்தும் நோய்களுக்கு) இந்த மருந்து நல்லபலனைத்தந்துள்ளது. எனவே கோவிட்19 தொற்றை உண்டாக்கும் சார்ஸ்கொரோனா வைரஸ்2 (SarsCoV2) தாக்குதலுக்கு எதிராகவும் இது சிறந்த பலனைத் தரும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

சிகாகோ பல்கலைக்கழகம் முன்னின்று நடத்திய மருத்துவப் பரிசோதனையின் முடிவுகள் கசிந்துள்ளன. அதன்படி இந்த மருந்து நல்ல பயனைத் தருவதாக தெரிந்துள்ளது.

உலக சுகாதார நிறுவனம் 'சாலிடாரிட்டி' (WHO Solidarity) திட்டத்தின்கீழ் நடத்தி வரும் பரிசோதனையில் இடம் பெற்றுள்ள 4 மருந்துகளில் இதுவும் ஒன்று. அதைத் தயாரிக்கும் Gilfa நிறுவனம், இந்தப் பரிசோதனைகளை நடத்தி வருகிறது.

## எச்.ஐ.வி.க்கான மருந்துகள் கொரோனா வைரஸ் தாக்குதலை குணமாக்குமா?

எச்.ஐ.வி. சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் lopinavir மற்றும் ritonavir ஆகிய மருந்துகள் கொரோனா வைரஸ் சிகிச்சைக்கு பயன்தரும் என்று நிறைய பேசப்படுகிறது என்றாலும் அதற்கான ஆதாரங்கள் குறைவாகவே உள்ளன.

சில மருந்துகள் ஆய்வகப் பரிசோதனையின் போது நல்ல பலன் தரும். ஆனால் மனிதர்களுக்குப் பயன்படுத்தும் போது முடிவுகள் ஏமாற்றமாகி விடுவது உண்டு.

கோவிட்19 தீவிர பாதிப்பு உள்ளவர்கள் குணமாவதற்கு, மரணங்களைக் குறைப்பதற்கு அல்லது வைரஸ் அளவைக் குறைப்பதில் இந்த மருந்துகள் பயன் தரவில்லை.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு சிகிச்சை அளிக்க, உலகம் முழுக்க 150க்கும் மேற்பட்ட மருந்துகள் குறித்து ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. ஏற்கனவே இருக்கும் சில மருந்துகள், இந்த வைரஸ் நோய் சிகிச்சைக்கு பயன்படுமா என்றும் பல பரிசோதனைகள் நடைபெறுகின்றன. இந்த நோயைக் குணமாக்குவதற்கு தாங்கள் 'ரெக்கவரி' (Recovery) திட்டத்தின் கீழ் மேற்கொண்டுள்ள பரிசோதனை முறைதான் உலகிலேயே மிகப் பெரியது என்று பிரிட்டன் கூறியுள்ளது. இதில் ஏற்கெனவே 5,000க்கும் மேற்பட்ட நோயாளிகள் பங்கேற்றுள்ளனர்.

இருந்தபோதிலும், அதிக ஆபத்தில் உள்ள நோயாளிகளிடம் (25 சதவீதம் மரணம் அடைந்தவர்கள்) நடத்திய மருத்துவப் பரிசோதனையில், நோய்த் தொற்றுக்கு எதிராக இந்த மருந்து செயல்படுவதற்கான காலம் கடந்துவிட்டது தெரியவந்துள்ளது.

## மலேரியா மருந்துகள் கொரோனா வைரஸ் தாக்குதலை நிறுத்துமா?

உலக சுகாதார நிறுவனத்தின் 'சாலிடாரிட்டி' மற்றும் இங்கிலாந்தில் நடக்கும் 'ரெக்கவரி' ஆகிய திட்டங்களின்கீழ் செய்யப்பட்ட பரிசோதனைகள் இரண்டிலுமே மலேரியா மருந்துகள் இடம் பெற்றுள்ளன.

குளோரோகுயின், அதன் தொடர்ச்சியாக உருவாக்கப்பட்ட ஹைட்ராக்சி குளோரோகுயின் ஆகியவை வைரஸ் எதிர்ப்பு மற்றும் நோய் எதிர்ப்புத் திறனை ஆற்றுப்படுத்தும் குணங்களைக் கொண்டவையாக இருக்கலாம்.

அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் கூறிய காரணத்தால், இது கொரோனா வைரஸ் சிகிச்சைக்கு உகந்ததாக இருக்கும் என்ற எண்ணம் பெரிதாக ஏற்பட்டுள்ளது. ஆனால் அது எந்த அளவுக்குப் பயன் தரும் என்பது குறித்து குறைவான ஆதாரங்களே உள்ளன.

ஹைட்ராக்சி குளோரோகுயின் மருந்து மூட்டு வலி சிகிச்சைக்கும் பயன்படுத்தப்படுகிறது. நோய் எதிர்ப்பு மண்டலத்தை இது சீர் செய்வதால் மூட்டு வலிக்கு பயன்படுத்தப்படுகிறது.

இந்த மருந்து கொரோனா வைரஸ் கிருமியின் செயல்பாட்டைக் கட்டுப்படுத்தும் என்று ஆய்வகப் பரிசோதனைகளில் தெரிய வந்துள்ளது. நோயாளிகளுக்கு இது உதவிகரமாக இருப்பதாக மருத்துவர்கள் கூறினர் எனவும் தகவல்கள் உள்ளன.

இருந்தபோதிலும், இந்த மருந்து பயனுள்ளதாக இருக்கும் என்பதற்கு உறுதியான ஆதாரங்கள் எதுவும் இல்லை என்று உலக சுகாதார நிறுவனம் கூறியுள்ளது.

## நோய் எதிர்ப்பு அமைப்பு



வைரஸ் தாக்குதலுக்கு எதிராக நோய் எதிர்ப்பு அமைப்பு அதிகமாக செயலாற்றும் போது, நோய்த் தொற்றுக்கு எதிரான போரை தீவிரப்படுத்த இது உதவிகரமாக இருக்கும். ஆனால் அது அதிகமாகும்போது, உடலில் பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தி, மரணத்தையும் ஏற்படுத்தக்கூடும்.

'சாலிடாரிட்டி' பரிசோதனையில் இன்டர்ஃபெரான் பீட்டா (Interferon beta) மருந்து பற்றியும் ஆய்வு செய்யப்படுகிறது. இது தண்டுவட மரப்பு நோய் உள்ளிட்ட சிகிச்சைகளில் பயன்படுத்தப் படுகிறது.

(15 ஆம் பக்கம் பார்க்க..)

# பரிசோதனை...

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆரம்ப கட்டத்தில் நோய்த் தொற்று தாக்கியவர்களில் பலரும் வுஹான் கடல் உணவு மார்க்கெட் செயல்பாட்டில் தொடர்பு உள்ளவர்களாக இருந்தனர்.

ஆனால்தூதரகஅளவிலானஇரகசியத் தகவல் பரிமாற்றங்களில், இடம் பெற்ற இந்த வியங்கள் எந்த அளவுக்கு அசாதாரணமானவையாக இருக்கும்?

விபத்துகள் நடப்பது உண்டு. 2014 ஆம் ஆண்டில், மறந்து வைக்கப்பட்ட தட்டம்மை வைரஸ்களின் சோதனைக் குழாய்கள் ஓர் அட்டைப் பெட்டியில் வொஷிங்டனின் ஆராய்ச்சி மையத்தில் இருந்தன.

2015 ஆம் ஆண்டில், இறந்து போன ஸ்போர்களுக்குப் பதிலாக உயிருடன் இருந்த ஆந்த்ராக்ஸ் சாம்பிள்களை அமெரிக்க இராணுவம் தற்செயலாக நாட்டில் 9 ஆய்வகங்களுக்கும், தென் கொரியாவில் ஒரு இராணுவ தளத்திற்கும் கொண்டு சென்று சேர்ப்பித்தது.

பி.எஸ்.எல். மதிப்பீட்டில் கீழ்நிலையில் உள்ள ஏராளமான ஆய்வகங்களின்



பாதுகாப்பு ஏற்பாடுகளில் மாறுபாடுகள் இருக்கும். குறைந்த அளவிலான விதி மீறல்கள்செய்திகளில்இடம்பெறுவதில்லை.

ஆனால்சிலஆய்வகங்கள்பி.எஸ்.எல். – 4 தரநிலை பெற்றவையாகக் குறிப்பிடப் பட்டுள்ளன. உலகம் முழுக்க அதுமாதிரி 50 ஆய்வகங்கள் உள்ளன என விக்கிபடியா கூறுகிறது. அவற்றில் வுஹான் நச்சுயிரியல் மையமும் ஒன்று. ஆனால் இதுகுறித்த அதிகாரப்பூர்வ பட்டியல் எதுவும் கிடையாது.

அவை மிக கடுமையான விதிமுறைகளின்படி உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் அவர் அறிவியலில் மிக ஆபத்தானவையாகக் கருதப்படும் நோய்க் கிருமிகளைக் கையாளும் ஆய்வகங்களாக உள்ளன. அதன் காரணமாக, பொதுவாக அவற்றில் நல்ல பாதுகாப்பு செயல்பாடுகள் இருக்கும். எனவே இவற்றில் ஏதாவது ஒரு மையத்தில் பின்பற்றப்படும் நடைமுறைகள் குறித்து ஏதும் சிக்கல் எழுந்தால் குறிப்பிடத்தக்கதாக இருந்துவிடும்.

பரிசோதனை நிலையத்தில் இருந்து வைரஸ் வெளியானதாக முன்பு ஏதும் தகவல்கள் இருந்ததா?

இருந்தது. புதிய கொரோனா வைரஸ் பற்றிய தகவல் வெளியில் வந்ததும், அது எங்கே உருவாகியிருக்கும் என்பது குறித்து அனுமானங்கள் எழுந்தன – அவற்றில் பெரும்பகுதியானவை தவறான தகவலின்பேரில் எழுந்தவை.

ஜனவரி மாதம் வைரலாக இருந்த ஒரு இணையவழி தகவலில், உயிரி ஆயுதமாக ஆய்வகத்தில் இந்த வைரஸ் உருவாக்கப்பட்டிருக்கலாம் என்று கூறப்பட்டிருந்தது. விஞ்ஞானிகள் இவற்றை திரும்பத்திரும்ப மறுத்தனர். இந்த வைரஸ் விலங்குகளில் இருந்து உருவானதாக – அநேகமாக வவ்வால்களில் இருந்து உருவானதாக விஞ்ஞானிகள் கருதினர்.

அடிப்படை அறிவியல் ஆராய்ச்சிக்காகவும் வைரஸ்கள் உருவாக்கப்படுவது உண்டு. உதாரணமாக, நோய்க்கிருமிகள் எப்படி நோயை உருவாக்குகின்றன என்பதை ஆராயவும், எதிர்காலத்தில் வைரஸ்கள் எப்படி பரிணாம வளர்ச்சி பெறும் என்பதை ஆராயவும் இவ்வாறு செய்வது உண்டு.

ஆனால் கடந்த மார்ச் மாதம் வெளியான கொரோனா வைரஸ் மரபணு தொகுப்பு குறித்த ஆய்வில் அது உருவாக்கப்பட்ட வகையைச் சார்ந்தது என்பதற்கான அறிகுறி இல்லை என்று கூறப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் பற்றி இப்போதுள்ள மரபணுத் தொகுப்புகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், சார்ஸ் – சி.ஓ.வி. – 2 வைரஸ் இயற்கையான வழிமுறைகளில்தான் உருவாகியுள்ளது என்பதை நாம் உறுதியாகக் கூற முடியும் என்று ஆய்வின் இணை ஆசிரியரும் கலிப்ரோனியா ஸ்கிர்ப்ஸ் ஆராய்ச்சி மையத்தைச் சேர்ந்தவருமான கிறிஸ்டியன் ஆண்டர்சன் அப்போது கூறியிருந்தார்.

பிறகு, தற்செயலாக ஆய்வகத்தில் இருந்து அந்த வைரஸ் வெளியாகி இருக்கும் என்று கூறப்பட்டது. நோய்த் தொற்று ஆரம்பித்த வுஹான் கடல் உணவு மார்க்கெட்டும், இந்த இரு மையங்களும் குறுகிய தொலைவில் இருப்பதால் அவ்வாறு தொடர்புபடுத்தப் பட்டன.

வன விலங்குகளிடம் இருந்து – அநேகமாக வவ்வால்களிடம் இருந்து – இந்த வைரஸ் உருவாகியிருக்கும் என கருதப் பட்டது.

வவ்வால் கொரோனா வைரஸ் பற்றி வுஹான் நச்சுயிரியல் மையம் ஆராய்ச்சி மேற்கொண்டிருப்பது எல்லோருக்கும் தெரிந்த வியம். அந்தப் பணி சட்டபூர்வமாக நடைபெறுகிறது, சர்வதேச இதழ்களில் இதுகுறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன. 2000வது ஆண்டுகளின் தொடக்கத்தில் சார்ஸ் நோய்த் தாக்குதலை சந்தித்த அனுபவத்தை வைத்துப் பார்த்தால், இந்த ஆராய்ச்சியில் ஆச்சரியம் எதுவும் இல்லை.

இதுஎங்கே தொடங்கியது என்பது மிகவும் கடினமான கேள்வி என்று டாக்டர் லென்ட்ஜோஸ் கூறுகிறார். திரைமறைவில் நிறைய விவாதங்கள் நடந்துள்ளன. கடல் உணவு மார்க்கெட்டில் இருந்து இது உருவானதா என்பது உயிரி பாதுகாப்பு நிபுணர்கள் மத்தியில் தீவிரமாக விவாதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

ஆனால் சார்ஸ் – சி.ஓ.வி. – 2 வைரஸ் வுஹான் நச்சுயிரியல் மையத்தில் இருந்து தான் தொடங்கின என்பதற்கு இப்போதைக்கு எந்த ஆதாரமும் இல்லை.

உலக சுகாதார நிறுவனம் ஆய்வகம் ஒன்றில் தான் கொரோனா வைரஸ் உருவானது என்பதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை என்று கூறியுள்ளது என்று




சீன வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் ஜாவோ லிஜ்ஜியன் வியாழக்கிழமை செய்தியாளர்கள் கூட்டத்தில் தெரிவித்தார்.

நோய்த் தொற்று கையாள்வது குறித்து கடும் விமர்சனங்களுக்கு ஆளாகியுள்ள அதிபர் டிரம்ப், ஆய்வகத்தில் இருந்து வைரஸ் வெளியானதா என்பது குறித்து அமெரிக்கா ஆய்வு செய்து வருவதாகக் கூறியுள்ளார்.

நோய் தாக்குதலின் ஆரம்பகட்டத்தில் வெளிப்படைத்தன்மையாக செயல்படவில்லை என்று சீனா மீது ஏராளமான குற்றச்சாட்டுகள் கூறப்படுகின்றன. இது குறித்து தங்களுக்குத் தெரிந்தவற்றை சீனா தெளிவாக வெளியில் கூற வேண்டும் என்று அமெரிக்காவின் வெளியுறவுச் செயலாளர் மைக் பாம்ப்பியோ கூறியுள்ளார்.

இரு நாடுகளுக்கும் வார்த்தை போர் நடந்து வரும் நிலையில், வைரஸ் தாக்குதலின் ஆரம்பம் எங்கே என்று தடமறிவதற்கான முயற்சிகள் தொடர்ந்து கொண்டே இருக்கும்.



## அண்டார்டிக்காவிலுள்ள உலகின் மிக பெரிய பனிப்பாறை உடையப்போகிறதா?

ஏ – 68 என்று பெயரிடப்பட்டுள்ள உலகின் மிக பெரிய பனிப்பாறையின் அளவு சற்று சிறிதாகி உள்ளது. அண்டார்டிகாவில் 2017ஆம் ஆண்டு முதல் தனியே உடைந்து மிதந்து வரும் இந்த பனிப்பாறையின் மொத்த பரப்பளவு சுமார் 5,100 சதுர கிலோமீட்டர் என்று கணிக்கப்படுகிறது.தற்போது இந்த பனிப்பாறை 175 சதுர கிலோமீட்டர் அளவு குறைந்துள்ளது தெரிய வந்துள்ளது.

அண்டார்டிக் தீபகற்பத்தில் இருந்து தற்போது வடக்கு நோக்கி, வெப்பநிலை அதிகம் இருக்கும் நீர் பகுதிக்கு இந்த பனிப்பாறை நகர்ந்து செல்கிறது. கடலின் சீற்றத்தால் தெற்கு அட்லாண்டிக் பகுதிக்கு இது இழுத்த செல்லப்படும் என்று தெரிகிறது. உலகின் மிகப்பெரிய பனிப்பாறையின் அழிவு தொடங்கி விட்டதாக ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.ஐரோப்பிய ஒன்றியத்தின் செனிடெல் 1 செயற்கைக்கோள் மூலம் இந்த பனிப்பாறையின் புகைப்படம் கிடைத்துள்ளது. அதில்தான் இதன் அளவு குறைந்ததும் தெரிய வந்துள்ளது.'

'மிக விரைவில் இந்த பனிப்பாறை துண்டு துண்டாக உடையும் என்று தோன்றுகிறது. ஆனால் அந்த துண்டுகள் உருகாமல், பல ஆண்டுகள் தண்ணீரில் மிதக்கும்" என்கிறார் சுவான்சி பல்கலைக் கழகத்தின் ஆராச்சியாளர் பேராசியர் ஆட்ரியன் லக்மேன்.

## கொரோனா சிகிச்சைக்கு...

(154 ஆம் பக்த் தொடர்ச்சி..)

வைரஸ் தாக்குதல் நடைபெறும் போது உடலில் உருவாக்கப்படும் ரசாயனங்களின் தொகுப்பாக இருக்கும் நச்சுயிரிப் பெருக்கத் தடுப்புப் பொருள்கள் இன்டெர்ஃபெரான் எனப்படும்.

பிரிட்டனின் 'ரெக்கவரி' திட்டத்தின்கீழ் நடக்கும் மருத்துவப் பரிசோதனையில், அழற்சியைக் குறைப்பதற்கான டெக்சாமெதாஸோன் (fxame-thasone )என்ற ஸ்டீராய்டு வகை மருந்தை பயன்படுத்துவது குறித்து ஆய்வு நடைபெறுகிறது.

### குணம் அடைந்தவர்களின் ரத்தம் கொரோனா சிகிச்சைக்கு உதவுமா?

ஒரு நோய்த் தொற்றில் இருந்து குணமானவர்களின் ரத்தத்தில், அந்த வைரஸை எதிர்த்துப் போராடும் அணுக்கள் இருக்கும்.

ரத்தத்தில் இருந்து பிளாஸ்மாவை (நோய் எதிர்ப்பு அணுக்கள் கொண்ட பகுதி) பிரித்து, அந்த வைரஸ் பாதிப்பு உள்ளவருக்குசெலுத்துவது(பிளாஸ்மா தெரப்பி) என்பதுதான் இதன் அணுகு முறை.

"கன்வாலெசென்ட் பிளாஸ்மா" என்படும் இந்த முறை மூலம் ஏற்கெனவே 500 நோயாளிகளுக்கு அமெரிக்காவில் சிகிச்சை தரப்பட்டுள்ளது. மற்ற நாடுகளும் இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

### மருந்துகிடைப்பதற்குஎவ்வளவு காலம் ஆகும்?

கொரோனா வைரஸ் பாதிப்புக்கு சிகிச்சை தருவதற்கான மருந்து எப்போது கிடைக்கும் என்பதை இவ்வளவு சீக்கிரத்தில் கூறிவிட முடியாது. இருந்தபோதிலும், மருத்துவப் பரிசோதனைகளின் முடிவு அடுத்த சிலமாதங்களில்வரத்தொடங்கிவிடும். (சிகிச்சை தருவதைக் காட்டிலும் இந்த பாதிப்பு வராமல் தடுக்கக் கூடிய) தடுப்பூசிபயன்தருமா என சொல்ல முடியாத அளவுக்கு இது ஆரம்ப கட்டமாக உள்ளது.

ஏற்கெனவே தயாரிக்கப்பட்டுள்ள மருந்துகளை இதற்கும் பயன்படுத்துவது பாதுகாப்பானதாக இருக்குமா என்று மருத்துவர்கள் பரிசோதனை செய்து வரும் நிலையில், புதியாக தடுப்பூசிகளை உருவாக்கும் முயற்சியை ஆராய்ச்சியாளர்கள் அடிப்படை நிலையில் இருந்து தொடங்கியுள்ளனர்.

பரிசோதனை அடிப்படையில், புதிய கொரோனா வைரஸ் மருந்துகளும் பரிசோதனை நிலைய சோதனையில் இருக்கின்றன. ஆனால் மனிதர்களுக்கு செலுத்தி சோதனை செய்யும் அளவுக்கு அதில் முன்னேற்றம் ஏற்படவில்லை.

### சிகிச்சைஏன்தேவைப்படுகிறது?

உயிர்களைக் காப்பாற்றுவதற்கான தேவைதான் சிகிச்சைக்கான தேவை என்பது மட்டுமின்றி, முடக்க நிலை அமலாகியுள்ளதை விலக்க வேண்டும் என்பதும் முக்கியமானதாக உள்ளது.

சரியான சிகிச்சை முறையை உருவாக்கிவிட்டால், கொரோனா வைரஸ், சாதாரண நோயாக மாறிவிடும்.

வென்டிலேட்டர் தேவைப்படும் நிலையை ஏற்படுத்தி, நோயாளிகள் மருத்துவமனைக்கு வரும் சூழ்நிலை நின்றுவிட்டால், தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் கூட்டம் சேரும் நிலை குறையும். மக்களைக் கட்டுப்படுத்துவதில் அதிக கடுமை காட்ட வேண்டியிருக்காது.

### இப்போது நோயாளிகளுக்கு மருத்துவர்கள்எப்படி சிகிச்சை தருகி றார்கள்?

கொரோனா வைரஸ் பாதிப்பு ஏற்பட்டால், பெரும்பாலானவர்களுக்கு லேசான பாதிப்பாக இருக்கும் நிலையில் வீட்டிலேயே ஓய்வெடுத்துக் கொண்டு, பாரசிட்டமால் மருந்து மற்றும் பழச்சாறுகள் குடிப்பதன் மூலம் சிகிச்சை தரப்படுகிறது.

ஆனால் சிலருக்கு மருத்துவமனையில் வைத்து தீவிர சிகிச்சை தரும் அவசியம் ஏற்படும்போது, வென்டிலேட்டர் போன்ற செயற்கை சுவாசக் கருவிகளின் உதவி தேவைப்படுகிறது.

# கொரோனாவுக்குப் பயந்து தேர்தலை ஒத்திவைக்க கோருவது கோழைத்தனம் என்கிறது உலமாக் கட்சி



## வீடு வீடாகச் சென்று மரக்கறி போன்றவை விற்பனை செய்வது போல பிரசாரத்துக்காக வீடு வீடாக ஏறி அரசியல் வியாபாரம் செய்யலாமாம்

நாட்டில் பயங்கரவாத யுத்தம் நிலவிய காலத்திலும் தேர்தலில் போட்டியிட்ட பல வேட்பாளர்கள் குண்டு தாக்குதல்களில் கொல்லப்பட்ட போதும் நாட்டில் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டதில்லை என்பதால் கொரோனா அனர்த்தத்திற்காக தேர்தலை தொடர்ந்தும் ஒத்தி வைக்காமல் ஜூன் 20ல் அரசு தேர்தலை நடத்த வேண்டும் என உலமா கட்சி முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் கல்முனையில் அமைந்துள்ள உலமா கட்சி காரியாலயத்தில் நாடாளுமன்ற தேர்தல் தொடர்பில் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று சனிக்கிழமை இரவு இடம்பெற்ற போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது பற்றி அவர் மேலும் குறிப்பிடப்பட்டவை வருமாறு:-

தேர்தலை நடத்துவதில் எந்தச் சிக்கலும் இருக்காது. கடந்த 5 நாள்களாக பெரும்பாலான மாவட்டங்களில் ஊரடங்கு இரவு 8 மணி வரை தளர்த்தப்பட்டு மக்கள் ஓரளவு இயல்பு வாழ்க்கையை கண்டனர். தொழிலுக்கு போவோர் தொழிலுக்கு சென்றனர். பொருள் கொள்வனவு செய்வோர் சமூக இடைவெளியில் நின்று அதனை செய்தனர். எந்த பிரச்சினையும் இருக்கவில்லை.

இதே போல் தேர்தல் தினத்தன்றும் சமூக இடைவெளியில் அணிவகுத்து நின்று வாக்களிப்பதில் எந்த பிரச்சினையும் இருக்காது. அதே போல் கட்சிகள் பொது கூட்டங்கள் வைப்பதை தவிர்த்து வீடு வீடாக பிரச்சாரம் செய்யலாம். எவ்வாறு வீடு வீடாக சென்று மரக்கறிகள் போன்றவை விற்பனை செய்யப்படுகிறதோ அவ்வாறு கட்சிகளும் தமது தேர்தல் வியாபாரத்தை மேற்கொள்ளலாம். துண்டுப் பிரசுரங்கள் வழங்கலாம். எந்த தடையும் இல்லை. நாட்டில் பயங்கர யுத்தம் நடைபெற்ற காலத்தில் பல வேட்பாளர் கொல்லப்பட்ட காலத்திலும் நாட்டில் தேர்தல்கள் நடை பெற்றன.

88 ஆம் ஆண்டு வடக்கு கிழக்கு மாகாண சபை தேர்தலின் போட்டியிடுவோரை சுடுவோம் என புலிகள் அச்சுறுத்தி அவ்வாறு போட்டியிட்ட சிலர் சுடப்பட்டும் முஸ்லிம் காங்கிரஸ் அத்தேர்தலில் போட்டியிட்டது. இப்போது கொரோனாவுக்கு பயந்து முஸ்லிம் காங்கிரஸ் தேர்தலை ஒத்தி போடச்சொல்வது அதன் கோழைத்தனத்தை காட்டுகிறது.

தேர்தல் பொதுக்கூட்டத்தில் லலித் அத்துலத்முதலி போன்றோர் குண்டு வைத்து கொல்லப்பட்ட போதும், சந்திரிக்கா குண்டடி பட்டு ஒரு கண்ணை இழந்த போதும் தேர்தல்கள் ஒத்தி வைக்கப்படவில்லை.

இவ்வாறு எந்த இடத்தில் எப்போது குண்டு வெடிக்கும் என்று தெரியாத நிலையிலும் நாட்டில் ஐ தே க அரசோ சந்திரிக்கா அரசோ தேர்தல்களை ஒத்தி வைக்கவில்லை. கொரோனா வைரஸ் என்பது சமூக இடைவெளி இருந்தால் அதனை ஓரளவு கட்டுப்படுத்த முடியும் என்பது தெரிய வந்துள்ளது. இன்று வரை பிரதான கட்சிகளின் எந்தவொரு வேட்பாளரும் கொரோனாவால் கொல்லப்படவில்லை என்பதும் முக்கியமாகும்.

நாடு இன்றிருக்கும் நிலையில் தேர்தல் வைத்தாலும் ஏற்கனவே நாடாளுமன்றத்தில் இருந்தவர்களில் 90 வீதமானோர் மீண்டும் தெரிவு செய்யப்படும் சாத்தியக்கூறே நாட்டு மக்கள் மனோநிலையில் உள்ளது.

ஆகவே பொதுக்கூட்டங்கள் நடத்துவதைத் தடை செய்து, மாவட்டத்துக்கு மாவட்டம் வேட்பாளர்களோ, தலைவர்களோ செல்வதை தடை செய்து, சமூக இடைவெளி விட்டு தேர்தலைக் குறிப்பிட்ட திகதியில் நடத்தும்படி உலமா கட்சி அரசை கேட்டுக்கொள்கிறது. - எனக் கூறினார்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.04.2020 இல் வெளியிடப்பெற்றது.